
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஒக்டோபர் 17 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN 92
தිනකරන්
வரு. 92 இல. 248 | Thursday 17, October, 2024 | 12 பக்கங்கள் | 50/-

## தங்கத்தின் விலை சற்று அதிகரிப்பு

**22 கரட் 1,94,700 ஆக விற்பனை**



கொழும்பு, செட்டியார் தெருவின் விலை நிலவரங்களுக்கு அமைவாக, தங்கத்தின் விலை நேற்று சற்று (16) அதிகரித்து காணப்பட்டது. நேற்றைய

04

## அர்ஜுன் அலோசியஸின் பிணை மனு நிராகரிப்பு



அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய 3.5 பில்லியன் ரூபா வற் வரியை செலுத்த தவறிய வழக்கில், அர்ஜுன் அலோசியஸ் உட்பட இருவருக்கு 06 மாத கால சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள டபிள்யூ. எம். மெண்டிஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட இருவரை, பிணையில் விடுவிக்குமாறு சமர்ப்பிக்கப்பட்ட பிணை மனுவை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்தது.

பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரசிக்சரூக், நீதிமன்றத்தில் காரணங்களை முன்வைத்து, இந்த பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கு குற்றவியல் வழக்காக மாறியுள்ளதால், அவர்களை பிணையில் விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

தீர்ப்பை அறிவித்த மேலதிக நீதவான் பண்டார இளங்கசிங்க, இது உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் சான்றிதழ் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட வழக்கென தெரிவித்தார்.

இது ஒரு மாற்றுத் தண்டனை என்பதாலும், குற்றவியல் வழக்காக இல்லாததாலும் பிணை கோரிக்கை நிராகரிக்கப்படுவதாகவும் நீதவான் குறிப்பிட்டார்.

## சிவஸ்ரீ விஸ்வநாத குருக்கள் இறையடி சேர்ந்தார்



கொழும்பு, பம்பலப்பிட்டி. பழைய கதிரேஷன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ விஸ்வநாத குருக்கள், இறையடி சேர்ந்தார்.

பம்பலப்பிட்டி. பழைய கதிரேஷன் கோயிலில் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றிய இவர் ஒரு நல்ல பண்பாளராக ஆலயப் பணியை மிக மிகச் சிறப்பாக நடத்தினார்.

விஸ்வநாதக் குருக்கள் 1934ஆம் ஆண்டு ஜூன் 06 ஆம் திகதி கொழும்பில் பிறந்தார். பூஜை, புனஸ்காரங்களை முறைப்படி செய்து, அடியவர்களின் அளவற்ற அன்புக்கும், மதிப்பு, மரியாதைக்கும் ஆளாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் விற்கப்படாது

**நிறுவனத்தின் தலைவர் சரத் கனேகொட தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**




ஸ்ரீலங்கன் விமான சேவையை விற்பனை செய்வதற்கு கடந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட தீர்மானத்தை தற்போதைய புதிய அரசாங்கம் கைவிட்டுள்ளதாக, நிறுவனத்தின் புதிய தலைவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தை அதிக இலாப மீட்டும் நிறுவனமாக மாற்றுவதற்குத் தேவையான மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் என்றும் புதிய தலைவர் சரத் கனேகொட தெரிவித்துள்ளார்.

விமான சேவை நிறுவனத்தின் புதிய தலைவர் சரத் கனேகொடவை மேற்கோள்காட்டி TTG Asia இணையத்தளம் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் பல வருடங்களாக நட்டத்தை ஈட்டி வந்துள்ளது. இந்நிலையில், அதில் பங்குகளை கொள்வனவு செய்யவும் நிர்வகிப்பதற்கும் கடந்த அரசாங்கம் விலைமனுக்களை கோரியிருந்தது.

இத்திட்டத்தின் கீழ், விமான நிறுவனத்தின் 51 வீத பங்குகள் அரசாங்கத்திடம் இருக்க

04

## பாகிஸ்தானில் ஜெய்சங்கருக்கு உற்சாக வரவேற்பு



ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று பாகிஸ்தான் பயணமானார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்துக்கு வருகை தந்த இந்திய அமைச்சரை, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் கைகுலுக்கி வரவேற்றார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் தலைமைப் பதவியை பாகிஸ்தான் வகிக்கிறது. இந்தியா, சீனா, ரஷ்யா, ஈரான், கஜகஸ்தான், பெலாரஸ், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் இதில், அங்கம் வகிக்கின்றன.

இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுத்திருந்தார். அவரது அழைப்பை ஏற்று, பிரதமர் மோடிக்கு பதிலாக ஜெய்சங்கர் பங்கேற்றுள்ளார்.

பாகிஸ்தானுக்கு வந்த இந்திய அமைச்சரை, பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர்

04

# பரீட்சை வினாத்தாள் கசிவு மோசடிகளை தடுக்க புதிய முறை

**பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தகவல்**

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் எதிர்காலத்தில் அரை தானியங்கி முறையில் (semiautomatic method) பரீட்சை வினாத்தாள்களை உருவாக்கும் புதிய முறையை பின்பற்றவுள்ளதாக, பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் வினாத்தாள்கள் கசிவு போன்ற மோசடிகள் குறையுமென்றும், வினாத்தாள் தயாரிப்பில் தனிநபர்களின் பங்களிப்பைக் குறைத்து, அரை தானியங்கி முறையில், கணினி மயமாக்கப்பட்ட முறையில் வினாத்தாள் உருவாக்கம் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் கூறினார்.

இந்த புதிய முறையின் கீழ், மோசடி மற்றும் ஊழலை குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய கல்வி சீர்திருத்தங்களால், வினாத்தாள்கள் தயாரிக்கும் பணியில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், அதன் விளைவாக இந்த புதிய முறைகள் பின்பற்றப்படுமென்றும் அவர் கூறினார்.

பரீட்சை வினாத்தாள் தயாரிக்கும் பணியை தனி நபர்களை கொண்டு மேற்கொள்ளும் வரை, நூறு வீதம் மோசடி மற்றும் ஊழலை தவிர்க்க முடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் பொறிமுறையில் கடந்த காலங்களில் வினாத்தாள்கள் கசிந்தமை ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. தனிப்பட்ட நபர்களின் நம்பிக்கை தொடர்பான பிரச்சினையே பரீட்சை வினாத்தாள்கள் கசிந்தமைக்கான காரணமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.



1968 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் விதிகள் மற்றும் குற்றவியல் சட்டக்கோவையின்

04

## வெளிநாட்டவருக்கு வீடுகளை வழங்குவதில் அவதானம் அவசியம்

**பொலிஸ் பேச்சாளர்**



இணையத்தளங்களை அடிப்படையாகக் கொண்ட மோசடிகளில் இலங்கையர் சிக்கிக் கொள்வது அதிகரித்துள்ளது. இலங்கையரை இவற்றில் சிக்க வைப்பது மோசடிக்காரர்களுக்கு இலகுவாகவுள்ளதாலே இவ்வாறான குற்றச்செயல்கள் அதிகளவில் இடம்பெறுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

வெளிநாட்டவருக்கு வீடுகளை வாடகைக்கு வழங்கும் போதும், ஹோட்டல்களில் அறைகளை வாடகைக்கு வழங்கும் போதும் உரிமையாளர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் பொலிஸ் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

கண்டி, பாணந்துறை மற்றும் இராஜகிரிய பகுதிகளில் இது தொடர்பில் பலர் கைதாகியுள்ளனர். கண்டியில் 140 பேரும், பாணந்துறையில் 22 பேரும் மேலும் இராஜகிரியவில் 15 பேரும் இக்குற்றங்களுக்காக அண்மையில் கைதாகினர்.

இவர்களிடமிருந்து 500க்கும் மேற்பட்ட கையடக்க தொலைபேசிகள், 200க்கும் மேற்பட்ட கணினிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த சம்பவங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில், இவ்வாறானவர்களுக்கு வீடுகளை வாடகைக்கு வழங்கும் வீட்டு உரிமையாளர்களும் இவர்களுக்கு உடந்தையாகவுள்ளதாக தெரியவந்துள்ளது.

04

## அரசியலிலிருந்து ராஜபக்‌ஷக்கள் ஓய்வு பெறத் தயாரில்லை

**இப்போது தற்காலிக விலகல் மட்டுமே**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசியலிலிருந்து ராஜபக்‌ஷக்கள் ஓய்வு பெறத் தயாரில்லை. எனினும் இப்போது தற்காலிகமாகவே தாங்கள் விலகியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? என ஊடகவியலாளர்கள் அவரிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெற்றி மிக எளிதாக உள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

04

**ஐரோப்பிய - ரஷ்ய எல்லையில்**

## கோப்பாய் இளைஞன் சடலமாக மீட்பு

ஐரோப்பிய எல்லைப் பகுதியில் யாழ். கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 25 வயது இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரு வருடத்துக்கு முன்னர் அரபு நாடொன்றிலிருந்து ஐரோப்பாவுக்குச் செல்ல இவர், முயற்சி செய்துள்ளார்.

சிறு வயது முதல் தந்தையை இழந்த இவ்விளைஞர், உறவினர்கள் உதவியுடன் ஐரோப்பிய நாட்டுக்கு செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், நேற்று முன்தினம் எட்டுப்பேர் கொண்ட இளைஞர் குழு ஐரோப்பா ரஷ்ய எல்லையை கடக்க முயற்சிக்கையில், இவர் உயிரிழந்திருப்பதாக நம்பப்படுகிறது.

கொலையா? அல்லது இயற்கை மரணமா? என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சடலத்தை நாட்டுக்கு கொண்டு வர, உறவினர்கள் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

**அனைத்து ஓய்வூதியக்காரர்களுக்கும்**

## இடைக்கால கொடுப்பனவு ரூ. 3,000 வங்கிகளில் வைப்பு

**தபால் நிலையங்களூடாக நாளைமுதல் பெறலாம்**

ஓய்வூதியதாரர்களுக்கான 3,000 ரூபா மாதாந்த இடைக்கால கொடுப்பனவு அரச மற்றும் தனியார் வங்கிகளில் நேற்று வைப்பிலிடப்பட்டது. தபால் நிலையங்கள் மற்றும் உப அலுவலகங்களில் இவற்றை நாளை (18) முதல் பெற்றுக்கொள்ள முடியுமென ஓய்வூதிய திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஓய்வூதியதாரர்களுக்கான உத்தேச மாதாந்த இடைக்கால கொடுப்பனவு 3,000 ரூபா வழங்கப்படாதமை தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, அதற்கான பணத்தை திறைசேரியிலிருந்து வழங்குமாறு அண்மையில் பணிப்புரை




விடுத்திருந்தார். இதையடுத்து, தேவையான பணம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. இதனை இன்று முதல் ஓய்வூதியதாரர்களின் கணக்கில் வைப்பிலிட ஓய்வூதிய திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும்

04

**மன்னார் மனித புதைகுழி விவகாரம்**


## அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்கும் பணிகள் நிறைவு

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் ச.தொ.ச. மனித புதைகுழியின் அகழ்வு தொடர்பான விசாரணை அறிக்கையை, நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான ஆரம்பகட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மன்னார் மனித புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்டு இதுவரை நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்த மனித எச்சங்கள் மற்றும் பிற பொருட்களை, பிரித்தெடுக்கும் நடவடிக்கை, கடந்த வாரம் வரை நடைபெற்றிருந்தது.

பல வருடங்களுக்குப் பின்னர், கடந்த 07 முதல் 11 வரையான ஐந்து நாட்களும் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரும், சட்ட வைத்திய அதிகாரி குழுவும், காணாமலாக்கப்பட்டோர்



அலுவலகத்தினரும், பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகும் சட்டத்தரணிகளும், நீதிமன்ற அலுவலர்களும் இணைந்து மன்னார் நீதவான் முன்னிலையில் தரம் பிரித்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதன் போது மனித எலும்புகள் தனியாகவும், அதனுடன் எடுக்கப்பட்ட பிற பொருட்கள் தனியாகவும் பிரித்தெடுக்கப்பட்டு, பொதி

04

## உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை ஒப்படைக்காதோருக்கு வழக்கு

**முன்னாள் அமைச்சர்களை எச்சரித்து கடிதம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை எதிர்வரும் (30) முன்னர் ஒப்படைக்காத முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என, நீதி மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

உத்தியோக பூர்வ வாசஸ்தலங்களை ஒப்படைக்குமாறு முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு ஏற்கனவே பல தடவைகள் அறிவிப்பு விடுக்கப்பட்டிருந்தது. இருந்தபோதும் இதுவரை 11 பேர் மாத்திரமே உத்தியோக வாசஸ்தலங்களை ஒப்படைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தமது வாசஸ்தலங்களை மீள ஒப்படைப்பதில் பின்னடைவையே, காண முடிவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு கொழும்பு 7 பிரதேசத்தில் 40 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இன்னும் 29 பேர் இதுவரை, அந்த வாசஸ்தலங்களை மீள வழங்கத் தவறியுள்ளனர்.

அதேவேளை, அமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை பெற்றுக் கொடுக்கும் போது, அனைத்து விடயங்களையும் மீளாய்வு செய்து செலவைக் குறைக்கும் வகையில் புதிய

04

## சர்வதேச செய்திகள்

# காசாவுடன் லெபனான் நகரங்களிலும் இஸ்ரேல் தொடர்ந்தும் குண்டு மழை

### உதவிகள் செல்ல இஸ்ரேலுக்கு அமெரிக்கா காலக்கெடு

லெபனானில் போர் நிறுத்த அழைப்பை நிராகரித்த இஸ்ரேல், தெற்கு பெய்ரூட்டில் புதிய தாக்குதல்களை நடத்தியதோடு தெற்கு லெபனானின் பிரதான நகரான நெப்டியேவின் மாநகர கட்டடத்தின் மீது நடத்திய வான் தாக்குதலில் நகர மேயர் உட்பட ஐவர் கொல்லப்பட்டுள்ளனர்.

மறுபுறம் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் அங்கு மனிதாபிமான உதவிகளை அதிகரிக்க இஸ்ரேலுக்கு அமெரிக்கா கெடு விதித்துள்ளது.

வடக்கு காசாவில் இஸ்ரேல் முற்றுகையை தொடர்வதோடு அதன் ஏனைய பகுதிகளிலும் உக்கிர தாக்குதல்களை நடத்தி வருகிறது. இவ்வாறான தாக்குதல்களில் கடந்த 24 மணி நேரத்தில் 65 பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் காசாவில் கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக நீடிக்கும் இஸ்ரேலின் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 42,409 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 99,153 பேர் காயமடைந்துள்ளனர்.

குறிப்பாக நேற்று (16) அதிகாலை காசா நகரின் மேற்கே உள்ள அல் நாசிர் பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் ஐவர் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தாலியன் டவுன் பகுதிக்கு அருகில் வீடு ஒன்றின் மீதே இஸ்ரேல் குண்டு வீசியதாக உள்ளூர் வட்டாரத்தை மேற்கோள்காட்டி, பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா செய்தி வெளியிட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் மேலும் பலர் காயமடைந்திருப்பதாக அந்த செய்தி குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலுக்கு அமெரிக்கா எழுதி இருக்கும் கண்டிப்பான கடிதம் ஒன்றில் காசாவில் மனிதாபிமான உதவிகளை அதிகரிக்க 30 நாள் கெடு விதிக்கப்பட்டிருப்பதோடு இல்லாவிட்டால் அமெரிக்க இராணுவ உதவிகள் துண்டிக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுப்பப்பட்டிருக்கும் இக்கடிதம் இதுவரை அமெரிக்கா விடுத்த கண்டிப்பான எச்சரிக்கையாக பார்க்கப்படுகிறது.

வடக்கு காசாவில் இஸ்ரேல் ஒரு வாரத்துக்கு மேலாக நடத்தி வரும் முற்றுகையில் பெரும் எண்ணிக்கையானோர் கொல்லப்பட்டு அங்கு அத்தியாவசிய பொருட்கள் தீர்ந்திருக்கும் சூழலிலேயே அமெரிக்காவின் இந்த எச்சரிக்கை வந்துள்ளது.

மனிதாபிமான நிலைமை மோசமடைவது குறித்து அமெரிக்கா பெரும் கவலை அடைத்திருப்பதாக அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் வடக்கு மற்றும் தெற்கிற்கு இடையே சுமார் 90 வீதமான மனிதாபிமான நகர்வுகளை இஸ்ரேல் மறுத்துள்ளது அல்லது தடுத்துள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தை பரிசீலனை செய்வதாக இஸ்ரேல் குறிப்பிட்டிருப்பதோடு இவ்விடயத்தை தீவிரமாக எடுத்துக் கொள்வதாகவும் அமெரிக்காவின் சகாக்களின் கவலையை சரிசெய்ய விரும்புவதாகவும் தெரிவித்துள்ளது.

முடிவுற்ற இரண்டு வார காலத்தில் வடக்கு காசாவுக்கு உணவு உதவி மற்றும் எந்த விநியோகமும் செல்லவில்லை என்றும் அங்கு எஞ்சியுள்ள 400,000 பலஸ்தீனர்களுக்கான உதவிகள் தீர்ந்திருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.





இஸ்ரேலுக்கு மிகப்பெரிய இராணுவ உதவியை வழக்கும் நாடாக இருக்கும் அமெரிக்கா கடந்த ஓர் ஆண்டு காலத்தில் காசாவில் ஹமாஸ் அமைப்புக்கு எதிரான போரில் விமானங்கள், வழிகாட்டி குண்டுகள், ஏவுகணைகள் மற்றும் செல்களை வழங்கி வருகிறது.

இந்நிலையில் இஸ்ரேலுக்கு அனுப்பிய கடிதத்தில் இருக்கும் உள்ளடக்கத்தை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் உறுதி செய்துள்ளது. இதுபற்றி இணையதளம் ஒன்றே முதல் முறை செய்தி வெளியிட்டிருந்தது. இக்கடிதத்தில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஒஸ்டின் ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளனர்.

இதேவேளை லெபனானின் பல சிறு நகர்களிலும் இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதல்களில் பலரும் கொல்லப்பட்டுள்ளனர். அதேபோன்று கட்டடங்கள், வசதிகள் மற்றும் உட்கட்டமைப்புகளும் அழிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நெப்டியே மாநகரக் கட்டடத்தின் மீது நகர மேயர் மற்றும் ஊழியர்கள் இருக்கும்போது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் நகர மேயரான அஹமது கலீல் மற்றும் ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். அதே போன்று நெப்டியே பிராந்தியத்தின் பல பகுதிகளிலும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

லெபனானின் தெற்கு நகரான கனாவில் இடம்பெற்ற இஸ்ரேலின் தாக்குதல்களில் 15 பேர் கொல்லப்பட்டதாக லெபனான் சிவில் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. இதில் மேலும் 15 பேர் காயமடைந்துள்ளனர். இதேநேரம், லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் தெற்கு புறநகர் மீதும் இஸ்ரேல் வான் தாக்குதலை நடத்தியுள்ளது. லெபனான் தலைநகர் மீதான இஸ்ரேலின் தாக்குதலுக்கு அமெரிக்கா எதிர்ப்பை வெளியிட்ட நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரு வெவ்வேறு இடங்களில் வெடிப்புகள் இடம்பெற்று கரும்புகை எழுந்ததாக பார்த்தவர்கள் மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

பெய்ரூட்டின் தெற்கு புறநகர்களில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களின் போது ஓர் இடத்தின் மீது மாத்திரம் தாக்குதலுக்கான முன்னெச்சரிக்கையை விடுத்து பின்னர் பரந்த அளவில் தாக்குதல் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது.

தெற்கு பெய்ரூட்டில் உள்ள ஹிஸ்புல்லாவின் நிலத்தடி ஆயுதக் களஞ்சியத்தை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

தாக்குதல்களை நிறுத்துவதற்கான அழைப்பை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நிராகரித்துள்ளார். பிரான்ஸ் ஜனாதிபதி எமானுவேல் மக்ரோனுடன் தொலைபேசியில் பேசிய நெதன்யாகு, 'தன்னிச்சையான போர் நிறுத்தம் ஒன்றை எதிர்ப்பதாகவும் அது லெபனானில் பாதுகாப்பு நிலைமையில் எந்த மாற்றத்தை ஏற்படுத்தாது என்றும்' குறிப்பிட்டதாக அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

# ஈரான் மீதான எங்கள் தாக்குதலை அமெரிக்கா முடிவு செய்ய முடியாது

### இஸ்ரேல் பிரதமர் அலுவலகம்

ஈரான் மீதான எங்களின் தாக்குதலை அமெரிக்கா முடிவு செய்ய முடியாது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

எங்களை பொறுத்தவரை இஸ்ரேலின் நலன் தான் முக்கியம். ஈரான் மீது எப்படி தாக்குதல் நடத்த வேண்டும் என்பதை நாங்கள் தான் முடிவு செய்வோம் என்றும் அந்த அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி இஸ்ரேல் மீது ஈரான் பிளாஸ்டிக் ஏவுகணைத் தாக்குதல் நடாத்தியது.

அத்தாக்குதலுக்கு பதில் தாக்குதல் நடாத்துவதற்கான முஸ்தீபுகளில் இஸ்ரேல் ஈடுபட்டுள்ளது.



இஸ்ரேல் எம் மீது தாக்குதல் நடாத்தினால் கடும் தாக்குதல் முன்னெடுக்கப்படும் என்று ஈரான் கூறிவருகிறது.

இந்நிலையில் அமெரிக்கா ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீதோ, எண்ணெய் களஞ்சியசாலைகள் மீதோ தாக்குதல்கள் நடாத்த வேண்டாம். இத்தகைய தாக்குதல்கள் உலகளவில் பிரச்சினையை ஏற்படுத்தும். அதோடு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலிலும் அதன் தாக்கம் பிரதிபலிக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறியுள்ளார்.

இதேவேளை பிளாஸ்டிக் ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கக்கூடிய டாட் என்ற மேம்படுத்தப்பட்ட ஏவுகணை இடைமறிப்பு கட்டமைப்பையும் அமெரிக்கா இஸ்ரேலுக்கு வழங்கியுள்ளது. இத்தகைய சூழலில் இஸ்ரேல்' பிரதமர் அலுவலகம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேல் – ஈரான் இடையே தொடர்ந்து கொந்தளிப்பான நிலை நீடித்து வருவதால் இருநாடுகளும் எப்போது வேண்டுமானாலும் வான்வெளி தாக்குதல்களில் ஈடுபடக்கூடிய நிலை நிலவிவருவதாக போரியல் நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# ஜோர்டான், எகிப்து, துருக்கிக்கு ஈரான் அமைச்சர் அராச்சி பயணம்

ஈரான் மீது தாக்குததல் நடாத்துவதற்கான முஸ்தீபுகளில் இஸ்ரேல் ஈடுபட்டுள்ள சூழலில் ஈரான் வெளிவிவகார அமைச்சர் அப்பாசி அராச்சி ஜோர்டான், எகிப்து, துருக்கி ஆகிய நாடுகளுக்கு இராஜதந்திர விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.



மத்திய கிழக்கில் உருவாகியுள்ள போர்ப் பதற்றம், காஸா, லெபனான் மீதான போர் உள்ளிட்ட நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதை இலக்காகக் கொண்டு இப்பிராந்திய சுற்றுப் பயணத்தை அவர் ஆரம்பித்திருப்பதாக ஈரானின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் வெளிவிவகார அமைச்சர் அப்பாசி அராக்கி ஈராக், லெபனான், ஓமன், சிரியா மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு ஏற்கனவே விஜயம் செய்து பிராந்தியத்தில் உருவாகியுள்ள நெருக்கடிகள் குறித்தும் அவற்றுக்கு தீர்வு காண்பதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடியுள்ளார். இவ்வார தொடக்கத்தில் மஸ்கட் விஜயத்தின் போது, ஈரானிய அரச தொலைக்காட்சிக்கு வெளிவிவகார அமைச்சர் அளித்த பேட்டியில், பிராந்தியத்தில் தற்போது உருவாகியுள்ள சூழ்நிலை காரணமாக ஈரானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் ஓமன் மூலம் மறைமுகமான தொடர்பு நிறுத்தப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

# உயிருள்ளவற்றின் படங்களை ஒளிபரப்ப தலிபான்கள் தடை



உயிருள்ள அசையும் எந்த ஒன்றின் படத்தையும் ஊடகங்களில் ஒளிபரப்பவோ வெளியிடவோ கூடாதென ஆப்கானிஸ்தானின் தலிபான்கள் தடை விதித்துள்ளனர்.

தலிபான் சட்டப்பிரிவு 17 இன் கீழ் இத்தடை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக ஆப்கானிய தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

தலிபான்களின் கட்டுப்பாட்டு ஊடகங்கள் இந்த புதிய விதியைச் செயல்படுத்த தொடங்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அதேநேரம் பெண்கள் தங்களின் முகத்தை வெளியே காட்டவும், பொது இடங்களில் சத்தமாகப் பேசவும், பாடவும் தடை விதிக்கப்பட்ட சட்ட ஏற்பாடு அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டன.

2021 இல் ஆட்சிக்கு வந்த தலிபான்கள் பல்வேறு கட்டுப்பாடுகளையும் ஆப்கானில் அறிமுகப்படுத்தியுள்ளனர். இந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் தலிபான்களின் அறநெறி அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# எரிபொருள் தாங்கி குடைசாய்ந்து வெடித்ததில் 94 பேர் உயிரிழப்பு



வட மேற்கு நைஜீரியாவில் எரிபொருள் தாங்கி குடைசாய்ந்து வெடித்ததில் 94 பேர் கொல்லப்பட்டுள்ளதோடு பலர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜிகாவா மாநிலத்தில் உள்ள ஒரு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்துக் கொண்டிருந்த எரிபொருள் தாங்கி குடைசாந்ததோடு அதில் மக்கள் எரிபொருளை சேகரித்த சமயம் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் இத்தகைய உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்றாலும் உயிரிழப்பு மேலும் அதிகரிக்க முடியும் என்று பொலிஸ் பேச்சாளர் கூறியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# வட, தென் கொரியாக்களை இணைக்கும் பாதைகளை தகர்த்த வட கொரியா

வட, தென் கொரியாக்களுக்கு இடையில் நிலவிவரும் போர்ப் பதற்றத்திற்கு மத்தியில் வட கொரிய எல்லைக்கு அருகிலுள்ள இரு கொரியாக்களையும் இணைக்கும் நெடுஞ்சாலைகளையும் ரயில் பாதைகளையும் வட கொரியா தகர்த்தெறிந்துள்ளது.



இரண்டு கொரியாக்களையும் இணைக்கும் எல்லையிலுள்ள நெடுஞ்சாலைகளையும் ரயில் தண்டவாளங்களையும் முற்றிலும் துண்டிக்கும் வகையில் அவற்றை தகர்த்து பாதுகாப்பை பலப்படுத்துமாறு வட கொரிய தலைமை விடுத்துள்ள உத்தரவுக்கு அமைய இந்நடவடிக்கை மேற்'கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வட, தென் கொரியாக்கள் எதிர்காலத்தில் எவ்விதத்திலும் ஒன்றிணைவதைத் தவிர்க்கும் வகையிலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெற்கின் கூட்டுப்படைகளின் தளபதி தெரிவித்துள்ளார்.

இந்நடவடிக்கையைக் கண்டித்துள்ள தென் கொரியா, வட கொரியாவும் தென் கொரியாவும் ஏற்கனவே மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களை தெளிவாக மீறும் செயல் என்றும் இது மிகவும் அசாதாரணமானது. இத்தகைய செயற்பாடுகளை வட கொரிய அடிக்கடி மேற்கொள்வது கவலைக்குரிய விடயம் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# சர்வதேச தேவைகளைக் கருதி கல்வித் திட்டத்தில் மாற்றம் தேவை

## மனித வளத்தை மேம்படுத்துவதே நோக்கம் - ஜனாதிபதி



உலகளாவிய தேவைகளை கருத்திற்கொண்டு இலங்கையின் கல்வி தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில், மனித வளத்தை மேம்படுத்துவதற்காக மாணவர்களை அறிவாற்றல் நிறைந்தவர்களாக மாற்ற வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அடுத்த பத்து ஆண்டுகளில் உலகிற்குத் தேவையான மனித வளத்தை உருவாக்கும் பொறுப்பு, கல்வி அதிகாரிகளைச் சார்ந்துள்ளது.

இதற்கான பரந்த நோக்குடன் கல்வித் திட்டங்களைத் தயாரிக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (16) நடைபெற்ற கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்களின் முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடலில், கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

04

## ஜம்மு காஷ்மீர் முதலமைச்சராக ஒமர் அப்துல்லா பதவியேற்பு

ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தின் முதலமைச்சராக தேசிய மாநாட்டுக் கட்சியின் துணைத் தலைவர், ஒமர் அப்துல்லா கடந்த புதன்கிழமை பதவியேற்றார்.

அவருக்கு ஜம்மு காஷ்மீர் பிரதேசத்தின் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா பதவிப் பிரமாணமும், இரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.


ஸ்ரீநகரிலுள்ள ஷோ்'இ காஷ்மீர்' மாநாட்டு அரங்கில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி, ஜம்மு காஷ்மீரின் முன்னாள் முதல்வர் மெஹபூபா முஃப்தி ஆகியோர் பங்கேற்றனர்.

இந்தியா கூட்டணியில் இடம்பெற்றுள்ள சமாஜவாதி கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ், தி.மு.க. மூத்த தலைவர் கனிமொழி, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் டி. ராஜா உள்ளிட்ட தலைவர்களும் இதில், கலந்து கொண்டனர்.

## தினகரன் 92 வருடங்களுக்கு முன்

### தினகரன்

### இன்று 17 ஒக்டோபர் 1932



### லண்டன் – கொழும்பு டெலிபோன் பீம் சர்விஸ்

### சர். வில்லியம் பார்ட்டன் திட்டம்

"பிரிட்டிஷ் சர்க்காரின் (பீம்) கம்பியில்லா டெலிபோன் ஏற்பாடுகளைச் செய்துவரும் கம்பெனியாருடன் ஸ்தல சர்க்கார் ஓர் திருப்திகரமான ஏற்பாட்டைச் செய்வார்களாயின் இலங்கைக்கும் லண்டனுக்கு மிடையில் ஓர் பீம் சர்விசை ஏற்படுத்திக் கொள்வது சாத்தியம்" என்பதாக சர். வில்லியம் பார்ட்டன் தமது பத்திரிகைப் பிரதி நிதியிடம் நேற்றுக்காலை தெரிவித்தார்.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**

## சுயாதீன தொலைக்காட்சி டெலி டிராமாக்களை வாங்கும் திட்டத்தில் புதிய மாற்றம்

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு அலைவரிசைகளில் ஒளிபரப்புவதற்காக, டெலிடிராமக்களை விலைக்கு வாங்கும் பழைய முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, முன்னோட்டத்தை (Preview) நடத்துவதற்கு, உள்ளக வல்லுநர்களைக் கொண்ட இரண்டு உள் முன்னோட்டக் குழுக்களும், இரண்டு வெளிவாரி வல்லுநர்களை கொண்ட முன்னோட்டக் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளன. இரண்டு உள்ளகக் குழுக்களுக்குள், தொழிற்சங்கங்கள், சந்தைப்படுத்தல் துறை மற்றும் பொது பார்வையாளர்களின் பார்வையில் தலா ஒரு நபர் என ஆறு பேர் கொண்டதாக இந்தக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. வெளிவாரி குழுவில் டெலிடிராமா தயாரிப்பாளர்கள் மன்றத்தின் பிரதிநிதிகள் மற்றும் நன்கு அறியப்பட்ட, அனுபவம் வாய்ந்த கலைஞர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு குழுக்கள் முன்பார்வைக் குழுக்களுக்காக நியமிக்கப்பட்டுள்ளன. இந்த விசாரணையில் பத்து விடயங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னோட்டங்களில் குறிப்பாக கவனம் செலுத்தும் பத்து புள்ளிகள் உள்ளன. இந்த புள்ளிகளை வழங்குவதற்கான சிறப்பு முறை சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் அமைந்துள்ளன.

இந்த நான்கு குழுக்களிடமிருந்தும் பெறப்பட்ட பரிந்துரைகளை கண்காணிக்கவும், அவற்றிலிருந்து பெற்ற மதிப்பெண்களை சராசரியாக மதிப்பிடவும் ஐந்தாவது குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்தாவது குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில், இறுதியாக வாங்கும் நாடகங்கள் குறித்த இறுதி முடிவை நிகழ்ச்சி கொள்முதல் குழு எடுக்கும். முன்னதாக இந்நிறுவனம் டெலி நாடகங்களை வாங்கியதில், நடந்ததாகக் கூறப்படும் பல்வேறு முறைகேடுகளைக் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

04

## ஜனாதிபதித் தேர்தலை விட பொதுத் தேர்தல் முடிவுகள் வித்தியாசமாகவே அமையும்

### புதிய ஜனநாயக முன்னணி வேட்பாளர்



பாராளுமன்றத் தேர்தலில் பலம் வாய்ந்த குழு சிலிண்டர் சின்னத்தில் களமிறங்கியுள்ளதால், பொதுத் தேர்தல் முடிவுகள் ஜனாதிபதித் தேர்தலை விட வித்தியாசமாக அமையும் என, கொழும்பு மாவட்ட புதிய ஜனநாயக முன்னணி வேட்பாளர் ரணில் வில்அத்தரகே தெரிவித்தார். பிலியந்தலை அலுவலகத்தில் நடைபெற்ற சிநேகபூர்வ சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் அங்கு பேசிய ரணில் வில்அத்தரகே, ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் உணர்வுபூர்வமான மற்றும் எழுச்சியான முடிவு நியாயமானதுதான். உணர்வுபூர்வமான முடிவுகள் எடுக்கப்படும்போது, உண்மை மறைக்கப்படும். இந்த பொதுத் தேர்தலில் மக்கள் தங்களின் வாக்குகளை மக்களுக்காக உழைக்கக்கூடிய ஒருவருக்கே அளிப்பார்கள். சமூகத்துக்கும், நாட்டுக்கும் அதிக வேலைகளை செய்துள்ள, மக்களுடன் உள்ள பலமான குழுவினரே சிலிண்டரில் போட்டியிடுகிறார்கள்.

04

## வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் முறைப்பாடு செய்ய புதிய பிரிவு

### 'Talk to Chairman' என்ற திட்டம் ஆரம்பம்



வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளை தடுக்கவும், பிரச்சினைக்கு தீர்வுகளை வழங்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் புதிய திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

பணியகத்தின் புதிய தலைவர் கோசல விக்கிரமசிங்க இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

'தலைவரிடம் சொல்லுங்கள்' Talk to Chairman " என்ற இத்திட்டம் நேற்று முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

புலம்பெயர்ந்த தொழிலாளர் சமூகத்தின் தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடிகளை தடுப்பதற்கான திட்டத்தை செயல்படுத்துவதற்கு, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இதன் பிரகாரம், "தலைவரிடம் சொல்லுங்கள்" எனப் பெயரிடப்பட்டு, (15) பணியகத்தின் பிரதான அலுவலகத்தில் ஒரு சிறப்புப் பிரிவும் நிறுவப்பட்டுள்ளது.

04

## துபாயிலிருந்து கடத்தப்பட்ட மதுபானம்,சிகரெட்டுகளுடன் ஒருவர் அதிரடிக் கைது

### ரூபா,ஒரு கோடி பெறுமதியான பொருட்கள் சிக்கின

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

வெளிநாட்டு மதுபானம் மற்றும் வெளிநாட்டு சிகரெட்டுக்களைக் கொண்டு வந்த நபர்,நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதானார்.

இவற்றின் பெறுமதி ,சுமார் ஒரு கோடி ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்து வருகை தந்த இந்நபர்,இப்பொருட்களை விமான நிலையத்திலிருந்து வெளியே கொண்டு செல்ல முயன்றபோது குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.மேற்படி நபர் லிந்துலை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயது டைய நபர் எனத் தெரிய வந்துள்ளது.

இவர், தொடர்ச்சியாக வெளிநாடுகளிலிருந்து பல்வேறு பொருட்களையும் நாட்டுக்கு கொண்டு வந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நேற்று அதிகாலை 5.00 மணியளவில் துபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த யூ. எல். 226 ஆம் இலக்க விமானத்தில் அவர் பயணம் செய்துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

## இலங்கை மருந்து உற்பத்தியில் முதலீடு செய்ய கியூபா விருப்பம்



இலங்கையின் மருத்து உற்பத்தியில் கியூபா அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக, இலங்கைக்கான கியூபா தூதுவர் அன்த்ரேஸ் மாசெர்லோ கொன்சாலெஸ் கொரிடோ தெரிவித்துள்ளார். பிரதமர் அலுவலகத்தில் (15) மாலை நடைபெற்ற பேச்சுவார்த்தையிலேயே, தூதுவர் இதனை தெரிவித்துள்ளார்.

04

## இணையவழி நிதி மோசடிகள்: வெளிநாட்டவர் 09 பேர் கைது

### 20 கணினிகள், 282 செல்போன்களும் மீட்பு

இரணவில பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில், சந்தேகத்திற்கிடமான முறையில் தங்கியிருந்த வெளிநாட்டு பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (15) கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர்களில் 4 மலேசிய ஆண்கள், 3 எத்தியோப்பிய ஆண்கள் மற்றும் கென்ய பெண்ணொருவரும் சீன ஆண் ஒருவரும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. புத்தளம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின்படி,இந்த ஹோட்டல் சுற்றி வளைக்கப்பட்டது. இணையவழி பண மோசடியில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில், இந்நபர்கள் கைது செய்யப்பட்டனர்.இவர்களிட மிருந்து,20 கணினிகள், 3 இணைய ரவுட்டர்கள் மற்றும் 282 கையடக்கத் தொலைபேசிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் புத்தளம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கைகளை அரசாங்கம் வெளியிடாவிட்டால் திங்கட்கிழமை பகிரங்கப்படுத்துவேன்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான அறிக்கைகளை எதிர்வரும் ஏழு நாட்களுக்குள் அரசாங்கம் வெளியிடாவிட்டால், திங்கட்கிழமை தாம், அதனைப் பகிரங்கப்படுத்தப்போவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மம்பில தெரிவித்துள்ளார்.

உதய கம்மம்பிலவிடம் அவ்வாறான அறிக்கைகள் இருந்தால் அதனை மூன்று நாட்களுக்குள் வெளியிட வேண்டும் என, அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே நேற்றைய தினம் முன்னாள் எம்பி உதய கம்மம்பில, கொழும்பில் விசேட ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றை நடத்தி மேற்கண்டவாறு தெரிவித்தார். அறிக்கைகளை வெளியிடுவதாக, தாம், உறுதியளித்தாலும் அதனை ஒருபோதும் அரசாங்கத்திடம் கையளிக்கப் போவதில்லை என்றும் அதனைப் பகிரங்கமாகவே வெளியிடப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் தொடர்பான செனல் 4 அறிக்கை மற்றும் அத்தாக்குதல் தொடர்பாக புலனாய்வு அமைப்புகள் செயற்பட்ட விதம் தொடர்பில் ஆராய்வதற்கு, நியமிக்கப்பட்டிருந்த குழுவினால் வழங்கப்பட்ட அறிக்கைகளின் பக்கங்கள் காணாமற்போயுள்ளமை தொடர்பில் முறையான விசாரணை நடத்தப்படும் என அரசாங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது.

04

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

கொழும்பு,மாதம்பிட்டி பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில், ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிரேண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதம்பிட்டி கனத்தைப் பகுதியில், இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகவும் இச்சம்பவத்தில் 35 வயது நபர் ஒருவரே மரணமடைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

முச்சக்கர வண்டியின் பின்,ஆசனத்தில் அமர்ந்து குறித்த நபர் பயணித்த நிலையில், இனந்தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். இந்த சம்பவம் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த மிஹி ஜய பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி நபர், கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் மரணமடைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.




# பாதுகாப்பு அமைச்சு செயலாளருடன் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சந்திப்பு



பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்த (ஓய்வு) வை, இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி பாதுகாப்புஅமைச்சில்நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

பிராந்திய பாதுகாப்பு, பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் சிறந்த நிர்வாகத்துக்கான வலுவான அமெரிக்க அர்ப்பணிப்பு குறித்து எருவரும் கலந்துரையடினர்.

சமாதானம், ஸ்திரத்தன்மை மற்றும் பகிரப்பட்ட பாதுகாப்பு நலன்களை மேம்படுத்துவதற்காக அமெரிக்கஇலங்கை கூட்டுறவை வலுப்படுத்துவதுதொடர்பாகவும் இலங்கையின் கடல்சார் கள விழிப்புணர்வை ஆதரிப்பதற்காக Beech craft King Air 360ER விமானத்தின் பரிமாற்றத்துடன் இந்த கூட்டாண்மை செயல்படுவதைக் கண்டு பெருமிதமடைவதாகவும் அமெரிக்க தூதுவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## கொட்டாஞ்சேனை

# ஸ்ரீஸ்ரீராதாகிருஷ்ண ஆலயத்தில் இன்று முதல் தாமோதர மாதம் அனுஷ்டிப்பு

கொழும்பு, கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயத்தில் இம்மாதம் 17ஆம் திகதி முதல் எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதிவரை புனிதம் மிகு தாமோதர மாதம் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்தத் தாமோதர மாதத்தில் தினமும் மாலை 6.00 மணிமுதல் விஷேட பூஜை, விளக்கேற்றல், கீர்த்தனை என்பனவும் அதைத் தொடர்ந்துபக்தர்களுக்குப்பிரசாதம் வழங்கல் என்பனவும் இடம்பெறும்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணரை, அன்னை யசோதை கயிற்றால் உரலில் கட்டிய நிகழ்வை நினைவு கூரும் வகையில் இந்தத் தாமோதர விழா வருடாந்தம் கொண்டாடப்படுகிறது. தாம என்றால் கயிறு. உதர என்றால் வயிறு. அதுவே தாமோதர எனப்படுகிறது.

பகவான் கிருஷ்ணர் காலிய என்னும் நாகத்தின் மீது நடனமாடியது, நரகாசுரனை வதம் செய்தது, கோவர்த்தன மலையை சுண்டு விரலால் தூக்கிக் குடையாகப் பிடித்தது போன்ற பல தெய்வீக லீலைகள் இம்மாதத்தில் தான் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பக்தர்கள் வருகை தந்து வைபவத்தில் பங்குகொண்டு பகவான் திருவருளைப்பெற்றுய்யுமாறு ராதாகிருஷ்ண ஆலயம் அழைப்பு விடுக்கிறது.



நவராத்திரி விழாவை முன்னிட்டு கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மகாவிஷ்ணு ஆலயத்தில் பத்மாவதி அறநெறிப் பாடசாலையின் ஏற்பாட்டில் பரதஷேத்திர நடன பள்ளி ஆசிரியை ஸ்ரீமதி துர்ஷானி ஜீவிதனின் வழிகாட்டலில் அவர்களது மாணவர்களும் கலந்து கொண்ட கலை விழா நிகழ்வு மிக சிறப்பாக நடைபெற்றது. படம்: எம். நஸார்



வடமேல் மாகாணத்தில் பரவி வரும் யானைக்கால் நோயினை கண்டறியும் முகமாக முந்தல் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சுகாதார அதிகாரிகளினால்(பி.எச்.ஐ) இரத்தப் பரிசோதணை இடம்பெற்றது. 594ஏ ஆண்டிமுனை, 594பிஉடப்பு, 594உடப்பு போன்ற இடங்களில் இது இடம்பெற்றது. இதில் ஆண்டிமுனை, செல்வபுரம், உடப்பு பகுதி மக்கள். ஆர்வத்துடன் பரிசோதனை செய்து கொண்டனர். உடப்பு குறூப் நிருபர்

# இன்றைய பலன்கள்

(17.10.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
பல செயல்களில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் கிடைக்காமல் போகலாம். சில செயல்களில் அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு.

**ரிஷபம் :**
எடுத்த காரியங்களில் முயற்சியுடன் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். என்றாலும் சில செயல்களில் சிறு சிறு தடைகளை சந்திப்பீர்கள்.

**மிதுனம்:**
சில காரியங்களில் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும் பலன் தந்த பல காரியங்களை எண்ணி மகிழ்ச்சியடைவீர்கள்.

**கடகம்:**
நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். பணவரவுகளில் திருப்தியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:**
உங்கள் செயல்கள் பலவற்றில் நன்மையான பலன்களை அடைவீர்கள். கடினமான செயல்களையும் முயற்சியோடு செய்து முன்னேற்றம் அடைவீர்கள்.

**கன்னி:**
நீங்கள் எடுத்த முயற்சிகளில் நல்ல பல முன்னேற்றங்களை காண்பீர்கள். வரவேண்டிய தன வரவு தாமதம் இன்றி வந்து சேரும்.

**துலாம்:**
உங்கள் முயற்சிகள் பலவற்றில் முன்னேற்றமான சூழ்நிலை காணப்பட்டாலும் சிலவற்றிலேயே வெற்றி காண்பீர்கள்.

**விருச்சிகம்:**
முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில செயல்களில் தொடர்பு இருந்தாலும் தக்க நபர்களில் உதவியுடன் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:**
காரியங்கள் பலவற்றில் தீவிர முயற்சியுடன் ஈடுபட்டாலும் சிலவற்றிலே எதிர்பார்க்கும் பலனை அடைய முடியும்.

**மகரம்:**
பல செயல்களில் முயன்று செயலாற்றினாலும் சிலவற்றில் மட்டுமே முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள்.

**கும்பம்:**
ஒப்பந்தங்களில் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். வரவேண்டிய தன வரவு சிறிது தாமதித்தே வந்து சேரும்.

**மீனம்:**
செயல்கள் பலவற்றில் சிறப்பாக முயற்சிகள் செய்தாலும் சில வற்றிலையை எதிர்பார்க்கும் நன்மைகளை அடைய முடியும்.

## அரசியலிலிருந்து ராஜபக்ஷக்கள்...

அரசியலிலிருந்து நீங்கள் ஓய்வு பெறுகிறீர்களா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ, அரசியல்வாதி தற்காலிகமாக ஓய்வு பெறுவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் உரையை நீங்கள் செவிமடுத்தீர்களா? முதன் முறையாக இக்குழுவினர் ஓய்வு பெறுகின்றனரென அவர் குறிப்பிட்டுள்ளார். அதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

இல்லை, நான் அந்த உரையை கேட்கவில்லை. அவரது கூற்றை எம்மால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷவினர் தேர்தலில் போட்டியிடவில்லை என மக்கள் மத்தியில் பரவலாக பேசப்படுகிறதே என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளித்துள்ள அவர்,

சசீந்திர ராஜபக்ஷ மொனராகலையில் போட்டியிடுகிறார்.113 என்ற எண்ணிக்கையை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டவருக்கு...

எவ்வாறான செயற்பாடுகளில் இவர்கள,ஈடுபடுகின்றனர் என்பதை அறிந்தே தமது வீடுகளை வாடகைக்கு வழங்குகின்றனர். மிகவும் சூட்சுமமான முறையில் அவர்கள் இவ்வாறான மோசடிகளில் ஈடுபடுகின்றனர்.

கண்டியில் 77 அறைகள் உள்ள ஒரு ஹோட்டலில் 47 அறைகளை வாடகைக்குப் பெற்று, அங்கு சகல வசதிகளுடனும் மோசடிகளில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர்.

எனவே ஹோட்டல் உரிமையாளர்களும் இது தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும். அவ்வாறில்லையெனில் எவரும் அறியாமல் கோடிக்கணக்கான பணத்தை இழக்க நேரிடும். இவர்கள் அனைவரும் சுற்றுலா வீசாவிலேயே வருகை தந்துள்ளனர்.

## அறிக்கையை நீதிமன்றில்...

செய்யப்பட்டு பாதுகாப்பாக நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

ச.தொ.ச. மனித புதைகுழியிலிருந்து அகழ்வு செய்யப்பட்ட மனித எலும்புக்கூட்டு தொகுதிகளோடு, காணப்படும் வேறு பொருட்கள் அடங்கிய பெட்டிகளும் பொதி செய்யப்பட்டு, நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தன.

மன்னார் ச.தொ.ச. மனித புதைகுழி தொடர்பான சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை மற்றும் அகழ்வை மேற்கொண்ட தொல்பொருள் பேராசிரியர் ராஜ் சோமதேவவின் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் கோரியுள்ளததாக சட்டத்தரணி நிரஞ்சன் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

அந்த அறிக்கைகளின் பக்கங்கள் காணாமற் போகவில்லை என்றும் அரசாங்கத்திடம் உள்ள அந்த அறிக்கைகளை அரசாங்கம் ஏழு நாட்களுக்குள் வெளியிட வேண்டும் என்றும் தெரிவித்த கம்மகம்பில, அதனை அரசாங்கம் வெளியிடாவிட்டால் பகிரங்கப்படுத்தப் போவதாகவும் அவர் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இரகசிய சட்ட ஏற்பாடுகளுக்கு அமையவோ அல்லது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழோ தம்மை கைது செய்வதற்கான விடயங்கள் தொடர்பில் நேற்று முன்தினம் அரசாங்க உயர் மட்டத்தினர் கலந்துரையாடியுள்ளதாக தெரிய வருகிறது என குறிப்பிட்ட அவர், அந்த அறிக்கை தமக்கு கடந்த பத்தாம் திகதி கிடைத்தவுடனே, அது தொடர்பில் தாம் நான்கு நாட்களுக்குள் அறிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நேர்ந்தாலும், நாட்டு மக்களுக்கு உண்மையை அறிவிப்பதிலிருந்து ஒரு போதும் பின்வாங்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே கிடைத்ததென்றும் தற்போதைய அரசாங்கத்துக்கு அது மூன்று வாரங்களுக்கு முன்பே கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், தமக்கு அது கிடைத்து மூன்று நாட்களே ஆவதாகவும் அவர் நேற்று தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீலங்கன் விமான சேவை...

வேண்டும். மீதமுள்ள 49 வீதம் முதலீட்டாளர்களுக்கு விற்கப்பட வேண்டும் என்ற நியதி உள்ளது.

அதற்கிணங்க ஆறு தரப்பினர் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.ஆனால் அவர்கள் எவரும் குறித்த முறைமையின் அடுத்த கட்டத்திற்கு தகுதி பெறவில்லை.

அதற்கிடையில், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனம் கடந்த 2022 ஏப்ரல் முதல் மார்ச் 2023 வரையிலான காலப்பகுதியில், இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றம் பெற்றுள்ளது.

அந்த வகையில் அதன் திரட்டப்பட்ட கடன் 1.2 பில்லியன் டொலர்களாகக் காணப்படுகிறது. நாட்டின் சுற்றுலாத்துறை. வளர்ச்சிக்கு ஸ்ரீலங்கன் விமான சேவை மிக முக்கிய பங்காற்றுவதாகவும் அதன் தலைவர் கனேகொட தெரிவித்துள்ளார்.

## தங்கத்தின் விலை...

நிலவரப்படி, 24 கரட் தங்கம் 2,10,500 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. 22 கரட் தங்கம் 1,94,700 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது.

இதன்படி, 24 கரட் தங்கத்தின் ஒருகிராமின் விலை 26,312 ரூபாவாகவும், 22 கரட் தங்கத்தின் ஒரு கிராமின் விலை 24,337 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது.

## பாகிஸ்தானில்...

வரவேற்றார். மேலும், பாகிஸ்தான் பாரம்பரிய ஆடையணிந்த சிறுவனும் சிறுமியும் இந்திய வெளிவிவகார அமைச்சரை வரவேற்றனர்.ஒன்பது வருடங்களின் பின்னர்,இந்திய அரசியல் தலைவர் ஒருவர் பாகிஸ்தான் சென்றமை குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து, விருந்தினர்களுக்கு ஷெபாஸ் ஷெரீப் கொடுத்த இரவு விருந்திலும் ஜெய்சங்கர் கலந்து கொண்டார்.

## இடைக்கால கொடுப்பனவு...

மாதாந்த இடைக்கால கொடுப்பனவாக 3,000 ரூபாவை வழங்க 24/08/2024 திகதியிட்ட 02/2024 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

இருந்த போதிலும், அதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. அண்மையில் நடந்த (14) அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, 6,79,960 ஓய்வூதியதாரர்களுக்கு இம்மாதத்துக்கான கொடுப்பனவாக 2,021 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## பரீட்சை வினாத்தாள்...

விதிகளின்படி, பரீட்சை மோசடியில் ஈடுபட்ட நபர்களுக்கு தண்டனை மற்றும் பிடியாணை இன்றி கைது செய்யும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

(Public Examinations Act) பொதுப் பரீட்சைகள் சட்டம் முழுக்க முழுக்க கிரிமினல் குற்றங்களைக் குறிப்பிடும் சட்டமாகும் என்றும் அவர் கூறினார்.

## உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை...

வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு வேலை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

அத்துடன் முறைப்பாட்டுப் பெட்டியொன்றும் நிறுவப்பட்டுள்ளது. மேலும் அதில் அனுப்பப்படும் முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்படுவதுடன் முறைப்பாட்டாளரின் தனிப்பட்ட தகவல்களை பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

அத்துடன் 0112 864188 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாகவும், 0717 593 593 என்ற வாட்ஸ்அப் இலக்கத்தினூடாகவும் மற்றும் talkchairman@slbfe.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாகவும் முறைப்பாடுகளை அனுப்புவதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.

## சர்வதேச தேவைகளைக்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற அமைச்சுக்களின் முன்னேற்ற மீளாய்வின் போது, கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சுக்களினால் செயற்படுத்தப்படும் ஐந்து திட்டங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பாடசாலைக் கல்வியை நவீனமயமாக்கல், ஆசிரியர் கல்வி, இடைநிலைக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வியின் மேம்பாடு என்பன தொடர்பில் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. இது தொடர்பான திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு, ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தனர்.

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் மிகவும் செயற்திறனுள்ள பாடசாலைகளாக மாற்றப்பட வேண்டும். மாணவர்களுக்கு விருப்பமான சூழலை உருவாக்கி சகல மாணவர்களும் கல்விக்கான பிரவேசத்தை வழங்கும் வகையில், பாடசாலைக் கல்வியை மறுசீரமைப்பது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம் ஆகிய உயர்தர பாடங்களை கற்பிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர மற்றும் அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

## ஜனாதிபதித் தேர்தலை... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

அதனால் ஜனாதிபதி தேர்தல் முடிவை விட பொதுத் தேர்தல் முடிவு புதிய ஜனநாயக முன்னணிக்கு சாதகமானதாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்த கஸ்பேவ தொகுதி மக்களுக்கு, முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கஸ்பேவ தொகுதியில் நாங்கள் தீவிரமாக அரசியலில் ஈடுபட்டோம். அதற்குக் காரணம், எங்களிடம் திறமையும், அறிவாற்றலும் உள்ளவர்கள் இணைந்ததனாலாகும்

கஸ்பேவ தொகுதியில் ஜே.வி.பி வெற்றி பெற்றாலும் ரணில் விக்கிரமசிங்க இரண்டாம் இடத்திற்கு வர முடிந்தது.

70 வருட ஆட்சிகள் மாறி, நாட்டின் வங்குரோத்து நிலை காரணமாக மக்கள் பட்ட துன்பங்களோடு பழைய தலைவர்கள் எவரையும் அனுப்பக்கூடாது என்ற முடிவை பெரும்பான்மை மக்கள் எடுத்திருந்தனர்.

மக்கள் பட்ட துன்பத்தை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்ட முடிவு நியாயமானது.

## இலங்கை மருந்து... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு, கியூபா அரசாங்கத்தின் வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்ட தூதுவர், இலங்கை மற்றும் கியூபாவுக்கிடையில் நிலவும் 65 வருட கால உறவுகளை நினைவு கூர்ந்தார்.

நீண்டகால இராஜதந்திர தொடர்புகளை மேலும் வலுப்படுத்தி,கியூபாவின் உதவியின் கீழ் முன்னெடுக்கப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டுள்ள நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டத்தை மீள ஆரம்பித்தல், இலங்கையின் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கென வைத்திய, விளையாட்டுக் கல்வி தொடர்பான புலமைப்பரிசில் வழங்கல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கடந்த பல வருடங்களாக கியூபா முகங்கொடுத்த பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும், கியூபா தொடர்ச்சியாக இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்ட பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, கியூபா பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென்ற உத்தியோகபூர்வ அழைப்பையும் விடுத்தார்.

பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்ரி, பிரதமரின் மேலதிக செயலாளர் மஹிந்த குணரத்ன உள்ளிட்ட அதிகாரிகளும், கியூபா அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட அதிகாரிகள் சிலரும் இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

## சுயாதீன தொலைக்காட்சி... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

குறித்த குழுவின் அறிக்கைகளுடன் நாடகத்தை கொள்வனவு செய்யுமாறு நிறுவனத்தின் தலைவர் பிரியந்த குமார வேதமுல்ல நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.



ரோட்டேரியன்.
இந்திரா பத்மநாதனின் நேர்முகம்

## கிளிநொச்சி நகர ரோட்டரி கழகத்தின்

# ஒரு சகாப்த பயணமும் சமூக மாற்றங்களும்...

## கிளி. நகர ரோட்டரி கழகத்தின் தசாப்த விழாவும் 11ஆவது தலைவர் பதவி உயர்வு விழாவும் இன்று!!




**கேள்வி: ரோட்டரி கழகத்தின் தசாப்த விழா பற்றிச் சொல்லுங்கள்?**

பதில்: கிளிநொச்சி நகர ரோட்டரி கழகம் 2014ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 09ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டு மருத்துவர் த.சத்தியமூர்த்தியும் அவரது நண்பர்கள் 15 பேருமாகச் சேர்ந்து கிளிநொச்சி மாவட்ட மக்களுக்காக சேவை செய்வதற்காக ஒரு கழகத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று கலந்துரையாடினார்கள். நீண்டகாலமாக பல்வேறு இடர்பாடுகளுக்கும் இடப்பெயர்வுகளுக்கும் உள்ளான கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு தமது வாழ்வாதாரத்துக்கு உதவ



கிளிநொச்சி ரோட்டரி கழகத்தின் முதலாவது தலைவர் வைத்திய கலாநிதி T சத்தியமூர்த்தி



கிளிநொச்சி நகர ரோட்டரி கழகத்தின் தற்போதைய தலைவர் ரொட்டேரியன் ராமச்சந்திரன் ஜசீலன்

வேண்டும் என்ற பெரு விருப்பம் காரணமாக 2014ஆம் ஆண்டு கிளிநொச்சி கழக ரோட்டரி கழகம் அதனுடைய செயற்பாட்டை முன்னெடுத்து செல்வதற்கு மருத்துவர் த.சத்தியமூர்த்தியும் அவருடைய நண்பர்களும் வழிசமைத்தார்கள்.

2014ஆம் ஆண்டு தொடங்கப்பபட்ட கிளி நகர ரோட்டரி கழகம் இன்று வரை 10 தலைவர்களின் கீழ் இந்த மாவட்ட மக்களுக்கான பல்வேறு சேவைகளையும் செய்து வருகின்றது.

**முன்னாள் தலைவர்களுடைய பெயர் விபரம்**

1.ரோட்டேரியன் மருத்துவர் த.சத்தியமூர்த்தி ஆரம்ப தலைவர்

2.ரோட்டேரியன் மருத்துவர் ரமணன் மஹாதேவன்

3.ரோட்டேரியன் எந்திரி கதிர் கடம்பசீலன்

4.ரோட்டேரியன் எந்திரி நவரத்தினம் சுதாகர்

5.ரோட்டேரியன் மஹாலிங்கம் பத்மநாதன்

6.ரோட்டேரியன் இராசரத்தினம் பங்கயச்செல்வன்

7.ரோட்டேரியன் பங்கரஸ் யோஜல் பியசீலன்

8.ரோட்டேரியன் நல்லையா கே.ஜெயசுந்தர

9.ரோட்டேரியன் அருட்திரு ஜோசுவா சிவஜானம்

10.ரோட்டேரியன் வனிதா சிவநேசன்

குறிப்பிட்ட 10 தலைவர்களுடைய காலத்திலேயே கிளிநொச்சி மாவட்டத்திலே கிளி. நகர ரோட்டரி கழகம், மக்களுக்கான சேவையை சர்வதேச ரோட்டரியினுடைய செயலாண்மை ஏற்பாட்டின்படி 07 பிரதான சேவைப்பிரிவுகளில் மேற்கொண்டு வருகின்றது.

11 ஆவது தலைவராக ரோட்டேறியன் ராமச்சந்திரன் ஜசீலன் பதவியேற்ற நிலையில் முன்னாள் தலைவர்களும் பதிவியேற்கின்ற தலைவர்களும் ரோட்டரி உறுப்பினர்களும், மாதாந்த கூட்டத்தில் சந்தித்து தலைவர் பதவியை பெறல் தொடர்பாக கலந்துரையாடியபோது, கடந்த 10 ஆண்டுகளும் கழகம் ஆற்றிய சேவைகளை மக்களுக்கு காட்சிப்படுத்தும் வண்ணம் தசாப்த விழாவாகவும் புதிய தலைவர் பதவியேற்பு விழாவாகவும் கொண்டாடுவதாக தீர்மானித்துள்ளனர்.

**கேள்வி: 07 பிரதான சேவைப் பரப்புகளை கூற முடியுமா?**

பதில்: அடிப்படை கல்வியும் அறிவூட்டலும் நோய்த் தடுப்பும் சிகிச்சை முறையும் சுத்தமான நீரும் சுகாதார வசதியும் சமூக பொருளாதார வளர்ச்சி தாய் சேய் நலம் பேணல் சூழல் பேணலும் பாதுகாப்பும் முரண்பாட்டு முகாமைத்துவமும் சமாதானம் பேணலும்

**கேள்வி: ரோட்டரி கழகத்தை தொடங்குவதற்கு அனுமதி பெறப்பட வேண்டுமா?**

பதில்: ஆம் சர்வதேச ரோட்டரியிடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும்.

**கேள்வி: சர்வதேச ரோட்டரி பற்றிச் சொல்லுங்கள்?**

பதில்: 2014ஆம் ஆண்டு Paul Harish என்பவரும் அவரது நண்பர்களும் மாலை நேரத்தில் பொழுதுபோக்கிற்காக சந்தித்த போது தங்களுடைய நிதியை சேமித்து மக்களுக்கு சேவை செய்ய தீர்மானித்தார்கள். இதன் பிரகாரம் 1905 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி சிக்காகோ இலினோயிஸில் முதலாவது கூட்டம் நடத்துவதன் மூலம் தொடங்கப்பட்டது.

சர்வதேச ரோட்டரிக்கு தலைவர் உட்பட பல்வேறு பதவிக்குமான அணியினர் காலத்துக்கு காலம் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்படுவர்.

சர்வதேச ரோட்டரியின் கீழ் 200 நாடுகளில் 46000 ரோட்டரி கழகங்கள் செயற்படுகின்றன. இக் கழகங்களில் 1400000 ரோட்டரி கழகங்கள் அங்கத்துவம் பெற்றுள்ளன.

இதை விட 170 நாடுகளில் 9100 ரோட்டரி கழகங்கள் செயற்படுகின்றன. இக் கழகங்களில் 210000 இளைஞர்கள் அங்கத்தவர்களாக இருக்கின்றனர். பாடசாலைகளின் இன்டிரக்ட் கழகங்கள், சர்வதேச ரோட்டரியின் கீழ் இயங்குகின்றன. 342953 இன்டிரக்ட் கழக உறுப்பினர்கள் 14500 கழகங்களில் அங்கத்தவர்களாக இருக்கிறார்கள்.

**கேள்வி: 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர்கள் ரோட்டரி கழக அங்கத்தவர்களாக செயற்பட முடியுமா?**

பதில்: ஒரு கழக உறுப்பினர் தான் வசிக்கின்ற பிரதேசத்திலுள்ள ரோட்டரி கழகத்தில் சம காலத்தில் அங்கத்தவர்களாக இருக்க முடியும்.

இன்டிரக்ட் கழகங்கள் பாடசாலைகளில் 10,11,12 ஆம் வகுப்புகளில் கற்கின்ற மாணவர்களை அங்கத்தவர்களாக கொண்டு செயற்படும் பாடசாலைகளில் இன்டிரக்ட் கழகத்தை தொடங்குவதற்கு ரோட்டரி மாவட்ட ஆளுநர், வலயக்கல்வி பணிப்பாளர், பள்ளி முதல்வர் ஆகியோரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

**கேள்வி: இலங்கையில் எத்தனை ரோட்டரி கழகங்கள் செயற்படுகின்றன?**

பதில்: சர்வதேச ரோட்டரியின் கீழ், 3220 ரோட்டரி மாவட்டங்கள் செயற்படுகின்றன. இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் 70 கழகங்கள் செயற்படுகின்றன. மருத்துவர்கள், பொறியியலாளர்கள்,வர்த்தகர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், அரச அலுவலர்கள் என இக் கழகங்களில் பல்வேறு தொழிற்துறை சார்ந்த 3000 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்.

**கேள்வி: ரோட்டரி கழகத்தின் பதவி அணியினர் எவ்வாறு தெரிவு செய்யப்படுகிறார்கள்?**

பதில்: பொதுச்சேவை உறுப்பினர்களால் ஆண்டு தோறும் ஜனநாயக ரீதியில் அவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். தேர்வு செய்யப்படுகின்ற பதவி அணியினர் ஒரு ஆண்டுக்கு மாத்திரம் கடமையிலிருப்பார்கள்.

தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாளர், சேவை தலைவர் பௌண்டேஷன் தலைவர், நிர்வாக தலைவர், பொது பகிரங்க காட்சிப்படுத்தல் தலைவர், சர்வதேச தலைவர், இளைஞர் சேவை தலைவர், நிர்வாக செயலாளர், பத்திரிகையாளர், படைக்கல சேவிதர் ஆகிய பதவி அணியினர் ஆண்டு தோறும் தெரிவு செய்யப்படுவர்.

**கேள்வி: பொது பகிரங்க காட்சிப்படுத்தல் என்றால் என்ன? அது ஏன் தேவைப்படுகின்றது?**

பதில்: எமது கழகத்தினுடைய செயற்பாடுகளை கழக அங்கத்தவர்கள் அல்லாத பொது மக்களுக்கு காட்சிப்படுத்த வேண்டியுள்ளது. நாங்கள் ஆற்றுகின்ற சேவைகள் தொடர்பாக பொது மக்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது.

பொது மக்கள் எம்முடைய நடத்தைகள், செயற்பாடுகள் தொடர்பாக கவரப்பட்ட வேண்டும். ஒழுக்க கட்டுப்பாட்டுடன் எமது செயற்பாடுகள் இருக்க வேண்டும். எமது தன்னலமற்ற சேவைகளால் கவரப்படுகின்ற பொதுமக்கள் எமது கழகத்தில் இணைவதற்கு விரும்புவதோடு, எங்களுடைய சேவைகளுக்கு தேவையான நிதி நன்கொடையை தருவதற்கு முன்வருவார்கள்.

**கேள்வி: கழக அங்கத்தவர்கள் எவ்வாறு இணைத்துக் கொள்ளப்படுகின்றார்கள்?**

பதில்: ஆண்டு தோறும் சர்வதேச ரோட்டரிக்கு சந்தாப்பணத்தை செலுத்தக்கூடியவர்கள், எம்முடன் இணைய விரும்புவோரை ரோட்டரி கழகம் அழைக்கும். எம்முடைய கழக கூட்டங்களுக்கு அவர்கள் விருந்தினர்களாக அழைக்கப்படுவார்கள்.

விருந்தினர்களாக வருகை தருபவர்கள் எம்முடன் இணைந்து செயலாற்றக்கூடியவர்களா என்பதை அவதானித்த பின்னர் சின்னம் சூட்டி இணைக்கப்படுவார்கள்.

**கேள்வி: ரோட்டரி கழகத்தின் கழக ஆண்டு என்பது எத்தனை மாதங்களை கொண்டது?**

பதில்: கழக ஆண்டு முதல் வருடத்தின் ஜுலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான 06 மாதங்களையும் அடுத்த ஆண்டின் ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் ஜுன் மாதம் 31ஆம் திகதி வரையான 06 மாதங்களையும் உள்ளடக்கியதாக 12 மாதங்களை கொண்டது.

**கேள்வி: சர்வதேச ரோட்டரியில் வேறு ஏதாவது கிளை நிறுவனங்கள் இருக்கின்றதா?**

பதில்: ஆம் ரோட்டரி அறக்கட்டளை ரோட்டறி பௌண்டேஷன் என்ற நிறுவனம் 1917 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த அறக்கட்டளை பூகோள ரீதியில் சுத்தமான குடிநீர் போலியோ தடுப்பு, மரண ஒழிப்பு போன்ற செயற்பாடுகளுக்கான நிதி உதவியை வழங்கி வருகின்றது.

**கேள்வி: தாங்கள் ஆற்றுகின்ற சேவைகளுக்குரிய நிதியை எவ்வாறு பெற்றுகொள்கின்றீர்கள்?**

பதில்: அங்கத்தவர்கள் ஆறு மாதத்திற்கு ஒரு முறை தமது சொந்த நிதியிலிருந்து சர்வதேச ரோட்டரிக்கு செலுத்துகிறார்கள்.

இதை விட பல்வேறு சேவை திட்டங்களுக்கும் தமது நிதி பங்களிப்பை வழங்குவதோடு சர்வதேச ரோட்டரி அறக்கட்டளைக்கும் தமது சொந்த நிதியில் ஒரு சிறு தொகையினை ஆண்டு தோறும் வழங்கி வருகின்றனர்.

எமது சேவைத்திட்டங்களால் கவரப்பட்ட நாட்டிலுள்ள நண்பர்களும், புலம்பெயர்ந்து வசிக்கின்ற நண்பர்களும் பெரு விருப்போடு எமது சேவைத்திட்டங்களுக்கான நிதி உதவியை வழங்குகின்றனர். இதை விட எமது ரோட்டரி மாவட்டத்திலிருந்தும் ஆண்டு தோறும் கிடைக்கின்ற மாவட்ட நன்கொடையிலிருந்தும் பூகோள அறக்கட்டளையிலிருந்து கிடைக்கின்ற நிதியை கொண்டும் பல்வேறு சேவை திட்டங்களை நாம் சிறப்பாக முன்னெடுத்து செல்கின்றோம்.

பூகோள சர்வதேச ரோட்டரி அறக்கட்டளையின், பூகோள நன்கொடை நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 3 கோடி நன்கொடையில் சிறுநீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கப்பட்டது. வாரா வாரம் 70 சிறுநீரக நோயாளிகள் இதனால் பயன்பெறுகின்றார்கள்.

இதை விட இலங்கையில் இருக்கின்ற ஏனைய ரோட்டரி கழகங்களுடன் இணைந்து என்பு நோய் சிகிச்சை பிரிவுக்கான உபகரணங்களும் கண் சத்திர சிகிச்சை செய்வதற்கான விழி வில்லைகளும், கருவிகளும், மருந்துகளும் வழங்கப்பட்டன. அத்துடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில், முக அழகுபடுத்தல் சிகிச்சையை ஆரம்பிப்பதற்காக மாவட்ட நன்கொடையிலிருந்து 50000.00 ரூபாய் வழங்கப்பட்டது.

**கேள்வி: நீங்கள் நடைமுறைப்படுத்தும் ஏனைய செயற்றிட்டங்கள்?**

பதில்: முன்பு குறிப்பிடப்பட்டது போல 7 பரப்புகளில் ஏராளமான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். குறிப்பாக பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு மலரும் கிளிநொச்சி என்ற பெயரில் மரக்கறி செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்டத்தின் பல பிரதேசங்களில் தோட்ட பயிர்ச்செய்கைக்காக தனிப்பட்டவர்களுக்கு மில்லியன் கணக்கான ரூபாய்களை நன்கொடையாக வழங்கியிருக்கின்றோம்.

நடு என்ற செயற் திட்டத்தின் கீழ் அங்கத்தவர்களை பிறந்த நாளின் போது, பாடசாலைகளில் 06 ஆம் வகுப்பில் கல்வி கற்கின்ற பெண் பிள்ளைகளின் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கோடு அவர்களுடைய வீடுகளில் 30 தென்னம்பிள்ளைகளை நடும் திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம். 5 ஆண்டுகளில் இத்தென்னம்பிள்ளைகள் காய்க்கத் தொடங்கும் போது அப் பெண்பிள்ளைகளின் முன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருக்கும்.

அணை என்ற செயற்திட்டத்தின் ஊடாக வீடுகளில் படுக்கை நோயாளிகளுக்குத் தேவையான அணையாடைகள் மற்றும் சத்துணவுகளை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை தாதிகள், மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களின் உதவியோடு வாரந்தோறும் வழங்கி வருகின்றோம்.

இன்னும் பாடசாலை மாணவர்களுக்கான எழுத்துக் கருவிகள் அப்பியாசக் கொப்பிகள், போக்குவரத்து வசதிக்கான சைக்கிள் வண்டிகளை வழங்கி வருகின்றோம்.

நாடு கொரோனா பெருந்தொற்று காரணமாக முடக்கப்பட்டபோது வீதியில் எவரும் நடமாட பயந்தபோது, கிளிநொச்சி நகர ரோட்டரி கழகம் மக்கள் சேவைக்காக வீடு வீடாக மாவட்டத்தின் 4 பிரதேச செயலகர் பிரிவுக்குள்ளான கரைச்சி, கண்டாவளை பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களுக்கு சென்று தொடர்ச்சியாக 3 மாதங்களுக்கு அரிசி, பருப்பு, சீனி போன்ற உலருணவுப் பொருட்களை வீடு வீடாக எடுத்து சென்று விநியோகம் செய்தனர்.

இதற்கு கழக உறுப்பினர்களும் புலத்தில் வசிக்கின்ற நண்பர்களும் பெரும் நிதி வழங்கி உதவி புரிந்தனர். இதைவிட கிளிநொச்சி மாவட்டம் நெல் உற்பத்தியை முக்கிய பொருளாதாரமாகக் கொண்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தோடு எழுக கிளிநொச்சி (ஸ்டார்ட் அப் கிளிநொச்சி) என்ற பாரிய செயற்திட்டத்தை இரண்டு ஆண்டுகளாக செயற்படுத்தி வருகின்றோம். இச் செயற்திட்டத்தின் மூலம் நவீன விவசாயச் செய்கை தொடர்பான பயிற்சிகளை வளவாளர்களை கொண்டு விவசாயிகளுக்கு வழங்கி வருவதுடன் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில், காலபோகம் சிறுபோகம் செய்வதற்கான கடன் உதவியை வழங்கி வருகின்றோம். ஒவ்வொரு விவசாயிகளுக்கும் அவர்கள் செய்கை பண்ணுகின்ற ஏக்கர் அளவிற்கு அமைவாக ரூபாய் 100000 இலிருந்து 300000 வரை கடன் உதவி வழங்குகின்றோம். இதுவரை மாவட்டத்தின் 300 விவசாயிகள் இவ்வாறான உதவிகளை தொடர்ந்து பெற்று வருகின்றனர். இனிவரும் நாட்களில் 500 விவசாயிகளுக்கு இக் கடன் உதவியை வழங்க உள்ளோம்.

இதை விட இந்த மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல் வெளி மாவட்டத்திற்கு எடுத்து செல்லப்படாது. எங்களுடைய மாவட்டத்தில் அரிசியாக நுகரப்படுவதற்கு வசதியாக நவீன இயந்திர சாதனங்களை கொள்வனவு செய்வதற்கு இம் மாவட்டத்தின் 3 அரிசியாலை உரிமையாளர்களுக்கு 15 மில்லியன் ரூபாய் குறைந்த வட்டி கடனாக, வங்கி ஊடாக வழங்கி உள்ளோம்

**கேள்வி: இதைவிட கிளிநொச்சி கழக ரோட்டரி கழகத்தினுடைய காட்சிப்படுத்தலை உயர்த்துவதற்காக என்ன செயற்பாடுகளை செய்கின்றீர்கள்?**

பதில்: ஆண்டு தோறும் போலியோ தொற்று நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வாகனம் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலங்களை ஆண்டு தோறும் நடாத்தி வருகின்றோம். 100 முன்பள்ளி ஆசிரியர்களை அழைத்து, அவர்களுக்குரிய இரண்டு நாள் பயிற்சியை வழங்கி, கிராமங்கள் தோறும் போலியோ விழிப்புணர்வை செய்வதற்காக ஆசிரியர்களை போலியோ விழிப்புணர்வு தூதுவர்களாக நியமித்து சான்றிதழ்களும் வழங்கியுள்ளோம்.

ஆண்டு தோறும் ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதியிலிருந்து 27 ஆம் திகதி வரை போலியோ வாரமாக பிரகடனம் செய்து பல்வேறு செயற்திட்டங்களை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் செயற்படுத்தி வருகின்றோம். தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சுகாதார ஞாயிறு என்ற செயற்திட்டத்தை வாரந்தோறும் செயற்படுத்தி வருகின்றோம். இச் செயற்திட்டத்தில் குறுந்தூர ஓட்ட செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றோம்.

**கேள்வி: இலங்கையிலுள்ள ரோட்டரி கழகங்களோடு சர்வதேசத்திலுள்ள ரோட்டரி கழகத்தோடு உங்கள் தொடர்பு எவ்வாறானது?**









பதில்: இவ்வாறான கழகங்களோடு இணைந்து அந்த செயற்திட்டங்களை நடத்தி வருவதுடன் அவர்களுடைய நிகழ்வுகளிலும் எமது அங்கத்தவர்கள் கலந்து கொள்கிறார்கள். தமிழ் நாட்டின் ரோட்டரி மாவட்டம் 3231,3232 ஐ சேர்ந்த கழகங்களோடு இணைந்து தன்வந்திரி செயற்திட்டம் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதனுடன் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கு உலருணவு, உடுபுடவைகளை வழங்கி வருகின்றோம்.

எமது அங்கத்தவர்கள் தனிப்பட்ட விடயமாக வெளிநாடுகளுக்கு செல்கின்ற பொழுது அங்குள்ள ரோட்டரி கழகங்களின் வாராந்த கூட்டங்களில் கலந்து கொள்கிறார்கள்.

அத்தோடு எமது அங்கத்தவர்கள் சர்வதேச ரோட்டரியால் ஜேர்மனியின் ஹம்பக் நகரம் சிங்கப்பூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் என்பதையும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தினுடைய பொருளாதார விருத்தியும் ரோட்டறியின் பங்களிப்பும் என்னும் தொனிப்பொருளில் மாநாட்டை இன்று நடத்த உள்ளோம்.

11 ஆவது தலைவரின் பதவியேற்பு விழாவும் 10 ஆவது ஆண்டு தசாப்த நிறைவு விழாவும் சிறப்பாக நடைபெற வாழ்த்துகிறேன்.

நேர்காணல்: இக்பால் அலி...

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஐப்பசி மாதம் 01ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் ஆகிர் பிறை 13

**குறள் தரும் சிந்தனை**

அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை

ஒருவரை நேரில் பார்க்கும் பொழுது பொய்யாகச் சிரித்துப் பேசிவிட்டு, அவர் இல்லாத இடத்தில் அவரைப் பற்றிப் பொல்லாங்கு பேசுவது அறவழியைப் புறக்கணித்து விட்டு, அதற்கு மாறான காரியங்களைச் செய்வதைவிடக் கொடுமையானது.

# இயற்கை அனர்த்த அபாயம் இன்னுமே நீங்கவில்லை

நாட்டில் கடந்த சில தினங்களாக நிலவிய மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையினால், 13 மாவட்டங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து 522 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 54 ஆயிரத்து 782 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 2,433 குடும்பங்களைச் சேர்ந்த 10,361 பேர் இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர்.

என்றாலும் கடந்த சில தினங்களாக நிலவிய மழையுடன் கூடிய காலநிலை நேற்று நீங்கி இருந்தது. ஆனால் வளிமண்டளவியல் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில், 'மத்திய வங்களா விரிகுடாவில் தாழமுக்கம் ஏற்பட்டுள்ளது. இத்தாழமுக்கம் இன்று 17 ஆம் திகதி முதல் நகரத் தொடங்கும். அதன் விளைவாக காற்றின் வேகம் மணித்தியாலயத்திற்கு 60 70 கிலோ மீற்றர்களாகக் இருக்க முடியும். அத்தோடு சிலாபம் முதல் காலி ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்பு கொந்தளிப்பாகக் காணப்படும் என்று குறிப்பிட்டுள்ளது. அத்தோடு கடற்றொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம் என்று சிகப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி நேற்று மழையுடன் கூடிய காலநிலை நாட்டில் காணப்படா விட்டாலும் மழையுடன் கூடிய காலநிலை நீங்கி விட்டதாகக் கருத முடியாது என்பதையே வளிமண்டளவியல் திணைக்களத்தின் இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

அதேவேளை, நேற்று இலங்கையில் மழையுடன் கூடிய காலநிலை காணப்படா விட்டாலும் இலங்கைக்கு அருகில் காணப்படும் தாழமுக்கத்தின் காரணமாகத் தமிழகத்தின் பல பிரதேசங்களிலும் நேற்று கடும் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளது.

இவை இவ்வாறிருக்க, நாட்டில் மழையுடன் கூடிய காலநிலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும், மண்சரிவு அச்சுறுத்தல் தொடர்ந்தும் நிலவவே செய்வதாகக் குறிப்பிட்டுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், கொழும்பு, காலி, கம்பஹா, கழுத்துறை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய ஆறு மாவட்டங்களுக்கும் மண்சரிவு முன்னெச்சரிக்கையையும் விடுத்திருக்கிறது.

அதன் காரணத்தினால் தற்போதைய காலநிலை தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு குடிமக்களுக்கு முன்பாக உள்ளது. ஏனெனில் வங்களா விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் இன்று முதல் நகரவிருக்கிறது. அதன் விளைவாக நிச்சயம் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறவே செய்யும்.

கடந்த கால அனுபவங்களின் படி, வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெரும்பாலும் இலங்கை அதிகரித்த மழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொள்வது வழமையாகும். அதன் விளைவாக வெள்ளம், மண்சரிவு அனர்த்தங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இதேவேளை, மண்சரிவு முன்னெச்சரிக்கையை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்தும் இருக்கிறது. அதனால் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வாழும் மக்கள் முன்னெச்சரிக்கையுடனும் விழிப்புணர்வுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக தாம் வாழும் வீட்டின் சுவர்களிலோ, நிலத்திலோ திடீரென வெடிப்புக்கள் ஏற்பட்டு விரிவடையுமாயின் அது தொடர்பில் தீவிர கவனம் செலுத்தத் தவறக்கூடாது. அத்தோடு பிரதேசத்திலுள்ள உயரமான மரங்களும், மின்சாரத் தூண்களும் திடீரென சரியலாம், திடீரென புதிய நீரூற்றுக்கள் தோற்றம் பெறலாம். அவற்றில் சேற்று நீர் வெளிப்படலாம். அதேநேரம் ஏற்கனவே காணப்படும் நீரூற்றுக்கள் திடீரென வற்றிப் போகலாம்.

இவ்வாறான முன்னறிகுறிகள் பிரதேசத்தில் வெளிப்படுமாயின் அவை பெரும்பாலும் மண்சரிவுக்கான முன்னெச்சரிக்கையாக இருக்கும் என்பது தான் பூகற்பவியலாளர்களின் கருத்தாகும்.

அதன் காரணத்தினால் அத்தகைய அறிகுறிகள் மலைநாட்டு பிரதேசங்களிலும் மலை சார்ந்த பகுதிகளிலும் வெளிப்படுமாயின் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் தாமதியாது பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும். அத்தகைய அறிகுறிகள் குறித்து கவனயீனமாகவோ அசிரத்தையுடனோ நடந்து கொள்ளக்கூடாது. இவ்வறிகுறிகள் குறித்து பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தருக்கு அறிவிக்கவும் தவறக்கூடாது. இவற்றின் ஊடாக மண்சரிவின் ஊடாக ஏற்படக்கூடிய அனர்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

என்றாலும் மண்சரிவுக்கான முன்னறிகுறிகள் வெளிப்பட்ட போதிலும் அவை தொடர்பில் உரிய கவனம் செலுத்தத் தவறியதன் விளைவாக, கடந்த காலங்களில் பாரிய இயற்கை அனர்த்தங்களுக்கு இந்நாடு முகம் கொடுத்திருக்கிறது. இதனை ஒரு போதும் மறந்து விடலாகாது.

ஆகவே மண்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களைத் தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதுவே காலத்தின் மிக அவசியமான தேவை என உறுதிபடக்கூறலாம்.

editor.tkn@lakehouse.lk



# எமது தமிழ் மக்களுக்கு அரசியல் ஞானம் ஊட்டப்பட வேண்டும்

## தமிழ் மக்கள் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும், பிரபல சமூகசேவையாளருமான வசந்தராசாவுடன் சந்திப்பு

தம்பிப்போடி வசந்தராசா 28 வருடங்களுக்கு மேலாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் தலைவராகவும், செஞ்சிலுவை அமைப்பின் தேசிய சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். மட்டக்களப்பு மாவட்ட சிவில் அமைப்பின் செயலாளர், தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர், தமிழ் மக்கள் கூட்டணியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் போன்ற பதவிகளை வகித்தவர் அவர்.

ஓய்வு பெற்ற கணித ஆசிரியரான இவர் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர் என்பதோடு, தலைமைத்துவம், முதலுதவி, அனர்த்த முகாமைத்துவம் உள்ளிட்ட பல துறைகளில் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல பயிற்சிகளைப் பெற்றுள்ளார். தான் பெற்ற கல்வியை ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு நாடு பூராகவும் வழங்கிவரும் சிரேஷ்ட பயிற்றுவிப்பாளருமாவார்.

இந்நிலையில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு கட்சியின் அழைப்பை ஏற்று இம்முறை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் களமிறங்கியுள்ளார் வசந்தராசா. அவர் தினகரனுக்கு பேட்டியளித்தார்.

**கேள்வி: ஆசிரியத் தொழில் செய்து கொண்டிருந்த நீங்கள் சமூக சேவைக்குள் வரவேண்டும் என ஏன் நினைத்தீர்கள்?**

பதில்: இயல்பாகவே நான் சமூக சேவையில் ஈடுபாடு உடையவன், 1985 காலப்பகுதியில் நான் எனது கிராமமான ஏறாவூர் முதலாம் பிரிவில் அமைந்துள்ள பாடசாலையில் கணிதபாட ஆசிரியராகக் கற்பித்து வந்தேன். அக்காலப் பகுதியில் கிழக்கில் வன்செயல் உச்சகட்டத்தில் இருந்தது. 1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி இந்த வன்முறை காரணமாக கிராமமே இடம்பெயர்ந்தது. நாமும் அதன்போது குடும்பத்தினரோடு இடம்பெயர்ந்தோம். அப்போது எமது கிராமத்திலிருந்த 398 வீடுகள் முற்றாக அழிந்தன. அக்காலப் பகுதியில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மட்டக்களப்பிலே கிளை ஒன்றை ஸ்தாபித்திருந்தது.

இயல்பாகவே சமூக சேவையில் ஈடுபாடுடைய நான், இழப்புகளைச் சந்தித்துக் கொண்டிருந்த மக்களுக்கு உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தின் அடிப்படையில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தில் ஒரு தொண்டனாக 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இணைந்து கொண்டேன்.

பின்னர் எனது கிராமத்தில் மக்கள் மீண்டும் குடியமர முற்பட்டபோது, மக்கள் மரநிழல்களிலும் வீதியோரங்களிலும்தான் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அப்போது பாதிக்கப்பட்ட 398 வீடுகளையும், நாம் முயற்சி எடுத்து அந்த வீடுகளைக் கட்டி முடித்ததோடு, இழந்து போன தொழில்களையும் மீட்டெடுக்க வேண்டும் என்ற முனைப்புடன் நாம் பல்வேறு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கான உதவிகளையும் மேற்கொண்டிருந்தோம். இவ்வாறு இயல்பாகவே சிறுவயது முதல் சமூக சேவையில் ஈர்க்கப்பட்டேன்.

**கேள்வி: யுத்தகாலத்தில் நீங்கள் செய்த சேவைகள் எவை?**

பதில்: 1995ஆம் ஆண்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளையின் தலைவராகக் கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அந்தக் காலகட்டத்திலே யுத்தம் காரணமாக மக்கள் முகாம்களில் தங்கிஇருக்கும் சம்பவங்கள் நிகழ்ந்தன. பின்னர் அவ்வாறான மக்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக அதிக சேவை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது. அந்த அடிப்படையில் நாங்கள் புதிய புதிய திட்டங்களை உருவாக்கி வெளிநாட்டு தூதரகங்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையகம், ஐ.சி.ஆர்.சி போன்ற அமைப்புகளை அணுகி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர உதவிகளைப் பெற்றுக் கொடுத்தோம்.

இளைஞர், யுவதிகளுக்கு முதலுதவி, அனர்த்த முன்னாயத்தம், தலைமைத்துவம் போன்ற பயிற்சிகளையும் வழங்கி வந்தோம். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், காயப்பட்டவர்களுக்குமான முதலுதவி, பாதிக்கப்பட்டவர்களுக்கான வீட்டுத் திட்டங்கள் பாதிக்கப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லல் போன்ற பணிகளை முன்னின்று செய்தோம். அக்காலத்தில் நாங்கள் பெரும் பணியைச் செய்ய வேண்டிய தேவை இருந்தது. புலிகளுக்கும், படையினருக்கும் இடையிலே ஏற்படுகின்ற மோதல்களில் மக்கள் பாதிக்கப்பட்டனர். மக்கள் தொழில்களை இழந்தனர். இவ்வாறு பல இழப்புகளைச் சந்தித்த மக்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், அரச திணைக்களங்கள், ஏனைய தன்னார்வ அமைப்புகள் ஒன்றிணைந்து பல உதவிகளை வழங்கினோம். மக்களுக்கு உளவியல் ரீதியான ஆலோசனைகளையும் மருத்துவ தேவைகளையும் நாம் நேரடியாகச் சென்று வழங்கி வந்தோம். இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் பல்வேறுபட்ட சவால்களையும் சந்திக்க நேரிட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியின் போதும் நாங்கள் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கியிருந்தோம். சுகாதார தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக நடமாடும் வைத்தியசாலைகளை ஏற்பாடு செய்திருந்தோம். முதலுதவி பயிற்சிகளை மாவட்டம் முழுவதும் இருந்து தேர்வு செய்யப்பட்ட 200 தொண்டர்களுக்கு வழங்கியிருந்தோம். அந்தச் சந்தர்ப்பத்தில் எங்கள் தொண்டர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றினர். தொண்டர் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவிகளை பெற்றுக் கொடுத்தோம். இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் 6617 வீடுகளை அமைத்துக் கொடுத்திருந்தோம். பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகளை புனரமைத்துக் கொடுக்க முடிந்தது.

**கேள்வி: நாட்டின் தற்போதைய ஜனாதிபதியின் தலைமைத்துவத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: நாட்டுக்கு புதிய தலைவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். பெரும்பான்மை மக்கள் அவரை தேர்ந்தெடுத்துள்ளதோடு, சிறுபான்மை மக்களும் அவருக்கு வாக்களித்திருக்கிறார்கள். அவர் மக்கள் எதிர்பார்க்கின்ற பல விடயங்களை செய்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.இ ந்த நாட்டிலே நீண்ட காலமாக புரையோடிப் போயிருக்கின்ற இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கான முயற்சிகளை அவர் மேற்கொள்வாரா, இல்லையா என்றதொரு கேள்வி இருக்கிறது. அவர் இதுவரையில் அது விடயமாக கருத்துக்களை கூறாமல் இருக்கிறார். அவர் ஊழலை ஒழிப்பதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்றார். இந்த விடயங்களை நாங்கள் சந்தோஷமாக பார்த்தாலும் கூட, இந்த நாடு முன்னேற வேண்டும் என்றால் இந்த நாட்டிலே மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமாக இருந்தால் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்றால், 70 வருடம் வருடங்களுக்கு மேலாக புரையோடிப் போயிருக்கின்ற எங்களது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். அவர் அதனையும் செய்ய வேண்டும் என நாமும் எமது மக்களும் எதிர்பார்க்கிறோம்.

**நாடு முன்னேற்றமடைய வேண்டுமென்றால், நாட்டிலே மக்கள் நிம்மதியாக வாழ– வேண்டுமாக இருந்தால் 70 வருட காலத்துக்கு மேலாக புரையோடிப் போயிருக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்**

**கேள்வி: தமிழ் மக்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: தமிழ் மக்களும் ஏனைய சமூகத்தை போல் உரிமைகளுடன் வாழ வேண்டும். அவர்கள் சொந்த காலிலேயே நின்று சுயமாக உழைத்து முன்னேற வேண்டும். எமது உரிமைக்காக பிறரிடம் கையேந்தி பிறரிடம் போராடி வருகின்ற நிலமை இருக்கக் கூடாது. எமது தமிழ் மக்களுக்கு அரசியல் ஞானம் ஊட்டப்பட வேண்டும்.

வ. சக்திவேல்...
(பெரியபோரதீவு நிருபர்)

# பாகிஸ்தானுக்கு விஜயம் செய்த இந்திய அமைச்சர் ஜெய்சங்கர்!

## ஒன்பது வருடங்களுக்குப் பின்னர் இடம்பெற்ற புதுமையான நிகழ்வு!

ஒன்பது ஆண்டுகள் கழித்து இந்தியாவின் சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் முதன் முதலாக நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் சென்றுள்ளார். பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு உச்சிமாநாட்டில் அவர் பங்கேற்கச் சென்றுள்ளார்.

ஒவ்வொரு நாடும் பிறநாடுகளுடன் சேர்ந்து கூட்டமைப்புகளை உருவாக்கி செயற்பட்டு வருகின்றன. அப்படியான ஒரு கூட்டமைப்புதான் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு. சுருக்கமாக எஸ்.சி.ஓ என்று அழைப்பார்கள்.

இந்த எஸ்.சி.ஓ கூட்டமைப்பில் மொத்தம் 10 நாடுகள் உறுப்பினர்களாக இருக்கின்றன. அதன்படி பெலாரஸ், சீனா, இந்தியா, ஈரான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான், பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் எஸ்.இ.ஓ அமைப்புக்கு ஒவ்வொரு நாடு தலைமையேற்கும். அந்த வகையில் 2023_24 ஆம் ஆண்டுக்கான தலைமைப் பொறுப்பை பாகிஸ்தான் ஏற்றுள்ளது. இதன் காரணமாக இந்த ஆண்டுக்கான எஸ்.சி.ஓ உச்சிமாநாடு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தலைமையில் இஸ்லாமாபாத்தில் தற்போது நடைபெற்று வருகிறது.

இந்த உச்சி மாநாடு நேற்று முன்தினம் தொடங்கி நேற்று 2 ஆவது நாளாக நடைபெற்றது. இந்த உச்சி மாநாட்டில் எஸ்.சி.ஓ கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ள நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். இந்தியா சார்பில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொண்டுள்ளார். மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதையடுத்து பிரதமர் மோடி சார்பில் ஜெய்சங்கர் பாகிஸ்தான் பங்கேற்கிறார்.

நேற்றைய தினம் ஜெய்சங்கர் விமானத்தில் பாகிஸ்தானின் ராவல்பிண்டி விமான நிலையத்தில் இறங்கினார். ஜெய்சங்கரை அந்நாட்டின் வெளியுறவுத்துறை இயக்குநர் ஜெனரல் (தெற்காசியா) இலியாஸ் மெகமூத் நிஜாமி வரவேற்றார். மேலும், ஒரு சிறுவன் மற்றும் ஒரு சிறுமி ஆகியோர் பாரம்பரிய உடை அணிந்து ஜெய்சங்கருக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

அதன் பிறகு ஜெய்சங்கருக்கு, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் இரவு உணவு விருந்து கொடுத்தார். ஜெய்சங்கரை பார்த்ததும் ஷெபாஸ் ஷெரீப் கைகுலுக்கி உற்சாகமாக வரவேற்றார். இருவரும் சில வினாடிகள் பேசிக் கொண்டிருந்தனர். அதன்பிறகு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.



இந்தியா_ பாகிஸ்தான் இடையேயான உறவு என்பது சுமுகமாக இல்லாத நிலை உள்ளது. இதற்கு முன்பு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த சுஷ்மா சுவராஜ் கடந்த 2015 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் சென்றார். அதன்பிறகு 2016 ஆல் சார்க் மாநாட்டில் ராஜ்நாத் சிங் பங்கேற்றார். அதன்பிறகு கடந்த 9 ஆண்டுகள் கழித்து தற்போது ஜெய்சங்கர் எஸ்.இ.ஓ உச்சி மாநாட்டில் பாகிஸ்தானில் பங்கேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றுக் காலையில் நித்திரை விட்டெழுந்த ஜெய்சங்கர், இஸ்லாமாபாத்தில் உள்ள இந்திய தூதரகத்தில் தூதரக அதிகாரிகளுடன் காலை நேரத்தில் நடைப் பயிற்சி சென்றார். மேலும் அவர் பாகிஸ்தான் சென்றதன் நினைவாக அங்குள்ள இந்திய தூதரகத்தில் செடி ஒன்றை நட்டு வைத்தார். இதுதொடர்பான போட்டோவை ஜெய்சங்கர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இந்த மாநாட்டில், வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் சார்ந்த பல்வேறு அம்சங்கள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.





# நகர்வலம்



## களுத்துறை வடக்கு கடற்கரையை அண்டிய பகுதியில் கடல்நீர் திடீரென பெருக்கெடுப்பு

### பல வீடுகள் நீரில் மூழ்கின; மக்கள் அச்சத்தில் இடம்பெயர்வு

**களுத்துறை சுழற்சி நிருபர்**

களுத்துறை வடக்கு, கெலிடோ கடற்கரையை அண்டிய நிலப் பகுதியை நோக்கி நேற்று (16) கடல் நீர் திடீரென பெருக்கெடுத்ததால் பல வீடுகள் நீரில் மூழ்கின.

இதன்போது அரச அலுவலகங்கள், வீடுகள், உல்லாசவிடுதிகள் நீரில் மூழ்கியதுடன் களுத்துறை வடக்கு கடற்கரை வீதி உட்பட பல குறுக்கு வீதிகளிலும் கடல் நீர் நிறைந்து காணப்பட்டதால் போக்குவரத்து நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. மேலும் நேற்று (16) நண்பகல் வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக நாட்டின் பல பகுதிகளில் கடும் மழை, பலத்த காற்றுடன் கூடிய காலநிலை காணப் படுவதால் சிலாபம், கொழும்பு, களுத்துறை, அம்பலாங்கொட, காலி, ஹம்பாந்தோட்டை மற்றும் பொத்துவில் வரையிலான பகுதிகளில் கடல் சீற்றம் ஏற்படலாம் எனவும் இதன் காரணமாக கடல் நீர் 25 30 மீட்டர் உயரத்துக்கு மேலெழுந்து சில நேரங்களில் கடல் நீர் நிலப் பகுதியை நோக்கி பெருக்கெடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. எனவே மீனவர்கள், கடற்கரையை அண்டிய மற்றும் கடல் சார் சமூகத்தினர் இது தொடர்பில் அவதானத்துடன் செயல்படுமாறும் வானிலை அவதான நிலையம் விடுத்துள்ள அதன் சிவப்பு எச்சரிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட மேற்படி சிவப்பு எச்சரிக்கை நேற்று 16 ஆம் திகதி காலை 8 மணியில் இருந்து, இன்று 17 ஆம் திகதி காலை 8 மணி வரையிலான 24 மணி நேரம் அமுலில் இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## டி.பி ஜாயா ஸாஹிரா கல்லூரியில் புதிய கேட்போர் கூட திறப்பு விழா

**ருஸைக் பாரூக்**



கொழும்பு 2, டி.பி. ஜாயா ஸாஹிரா கல்லூரி பழைய மாணவர்களின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கேட்போர் கூடத்தின் திறப்பு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் அதிபர் எம்.ஆர்.எம். மன்சில் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி பிரதம அதிதியாக கலந்து கொண்டு கேட்போர் கூடத்தை வைபவரீதியாக திறந்து வைக்கவுள்ளார். இவர்களுடன் வலயக் கல்வி அலுவலக கல்விப் பணிப்பாளர் பி.ஆர். தேவ்பந்து மற்றும் முஷான் இன்டர்நேஷனல் நிறுவன தலைவர் தொழிலதிபர் முஸ்லிம் சலாஹுதீன் ஆகியோர் சிறப்பு அதிதியாக கலந்து கொள்வார்.

இதில் பழைய மாணவர் சங்க தலைவர் மொஹமட் ஷபீன், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## இலங்கை பைத்துல்மால் நிதியத்தின் புதிய நிர்வாகத் தெரிவு 2024/2025




இலங்கையின் பைத்துல்மால் நிதியத்தின் (CBF) 67ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் பம்பலப்பிட்டியில் உள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, 2024/2025 காலப்பகுதிக்கான தலைவராக மீண்டும் ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஏ.எம். இல்யாஸ் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

2024/2025 ஆம் ஆண்டுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஏனைய நிர்வாகிகளாக, உபதலைவராக எம். எஸ். பௌசுல் ஹக், செயலாளராக ஏ.என். நஸ்வி ரஹ்மான், பொருளாளராக ஏ.எஃப். ஃபெரோஸ் நூன், உப செயலாளராக எஃப்.எம். அசப்கான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக உறுப்பினர்களாக ஏ.எம்.ஏ. நஸ்ரி, ஏ. ஃபஸால் இஸ்ஸதீன், எம் ருஷ்டி டஹ்லான், எஃப்.ஐ. அன்வர், டாக்டர். எம்.ஏ. செய்னுதீன், மொஹிதீன் காதர், ஷர்ஹான் முஹ்சீன், மெஹ்ராஜ் டி சாலி, சுரைஷ் ஹாஷிம், ருமைஸ் மொஹிதீன், இஜாஸ் ஹனிஃப், டாக்டர். ஒஸ்மான் காசிம், எஸ்.ஆர். றழி மற்றும் எம்.எச்.எம். நஸார் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இலங்கை பைத்துல்மால் நிதியமானது மருத்துவ தேவைகள், விதவைகள்/அனாதைகள் ஆதரவு, சக்கர நாற்காலி வழங்குதல் மற்றும் ஆதரவற்றவர்களுக்கு மாதாந்த உதவித் தொகை போன்றவற்றிற்கும் உதவி வழங்கப்படுவது போன்ற இன்னோரன்ன சேவைகளைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு பாகிஸ்தான் அரசின் நிவாரண உதவி






கொகமுல்ல, மெகொட கொலன்னாவ பகுதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 650 குடும்பங்களுக்கு எவ்வித இன, மத பேதமின்றி பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) பஹீம் உல் அசிஸ் எச்ஐ (எம்) நேற்று முன்தினம் (15) நூராணியா பள்ளிவாசல் வளாகத்தில் வைத்து உலர் உணவு பொருட்களை வழங்கி வைத்தார்.

இலங்கையில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாகிஸ்தானின் மனிதாபிமான நிவாரண உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் ஒரு பகுதியாக இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கற்பிட்டி, திகழி முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் நேற்றைய தினம் ஆசிரியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு



**புத்தளம் தினகரன் நிருபர்**

கற்பிட்டி, திகழி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றும் சித்திரப்பாட ஆசிரியர் ஒருவர் மீது திகழியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த (10/10) அன்று தாக்குதல் மேற்கொள்ள முயன்றுள்ளார். இதில் தலையிட்ட அதிபர் உட்பட ஏனைய சில ஆசிரியர்களுக்கும் தகாத வார்த்தைகளை பயன்படுத்தி மிக மோசமாக குறித்த இளைஞர் நடந்து கொண்டுள்ளார்.

இதற்கு எதிராகவும் ஆசிரியர்களின் பணிக்கு பாதுகாப்பு வேண்டியும் ஆசிரியர்களின் பாதுகாப்பு அச்சுறுத்தலை இல்லாமல் செய்து சுதந்திரமான கற்றல் கற்பித்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தி தருமாறும் பாடசாலை உள் விவகாரங்களில் தலையீடு செய்யும் நபர்களின் அராஜகங்களை தடுத்து நிறுத்துமாறும் கோரி நேற்று புதன்கிழமை (16) முதல் திகழி முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் சகல ஆசிரியர்களும் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் குதித்தனர். இதுவிடயமாக சம்பந்தப்பட்டோர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில்

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு அடிப்படை தேவைகளை உடனடியாக பெற்றுக் கொடுங்கள்!

### அதிகாரிகளுக்கு களுத்துறை மாவட்ட செயலாளர் பணிப்பு





**களுத்துறை சுழற்சி நிருபர்**

களுத்துறை மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு இதுவரை காலமும் அரச நிவாரணம் கிடைக்கப்பெறாத அனைவருக்கும் நிவாரண பொருட்கள் மற்றும் அடிப்படை தேவைகளை உடனடியாக பெற்றுக் கொடுக்குமாறு களுத்துறை மாவட்ட செயலாளர் ஜனக்க கே. குணவர்தன அரச அதிகாரிகளை பணித்துள்ளார்.

களுத்துறை வடக்கு வஸ்கடுவ பகுதியில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தற்காலிக இடங்களில் தங்கியிருந்த குடும்ப உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடி அவர்களுக்கான நிவாரணம் மற்றும் தேவைகள் தொடர்பில் நேரில் கண்டறிந்ததுடன் மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஏனைய பிரதேசங்களுக்கும் அரச நிவாரணங்கள் மற்றும் அடிப்படை வசதிகளை உடனடியாக பெற்றுக்கொடுக்க வேண்டிய உரிய நடவடிக்கைகளை காலதாமதமின்றி மேற்கொள்ளுமாறு அரச அதிகாரிகளை கேட்டுக்கொண்டார்.

இதன்போது, களுத்துறை மாவட்ட மேலதிக செயலாளர் ஷானிக்க திரிமான, களுத்துறை பிரதேச செயலாளர் சாரங்கி தீரரத்ன, களுத்துறை அனர்த்த முகாமைத்துவ பணிமனை பிரதிப் பணிப்பாளர் பிஷாந்த பெரேரா உட்பட பல உயர் அதிகாரிகள் கலந்துக் கொண்டனர்.

## கொழும்புத் தமிழ் சங்கம் நடத்தும் அற்றைத் திங்கள்

தமிழின் மூத்த படைப்பாளிகளும், தகைசான்ற ஆளுமைகளும், தமது வாழ்வியல் அனுபவங்கள், கலை, இலக்கிய நட்பு எழுகைகள், பண்பாட்டுத் தாக்கங்கள், படைப்பு முயற்சிகள் முதலியவற்றைப் பகிர்ந்து கொள்ளும் அற்றைத்திங்கள் நிகழ்வு இன்று 17ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவின் தலைமையில் பூபாலசிங்கம் வெளியீட்டகம், பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் பூபாலசிங்கம் ஸ்ரீதரசிங் உரை நிகழ்த்தவுள்ளார்.

## வெலிகமவில் வாண்மை விருத்தி செயலமர்வு

**வெலிகம தினகரன் நிருபர்**





கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகளுக்கான பிரிவு, தென் மாகாண முஸ்லிம் பாடசாலை அதிபர்களுக்கான வாண்மை விருத்தி செயலமர்வொன்றை நேற்று (15) செவ்வாய்க் கிழமை வெலிகம அறபா தேசிய பாடசாலை வெபா மண்டபத்தில் நடாத்தியது. இதில் முஸ்லிம் பாடசாலைகள் பிரிவு கல்விப் பணிப்பாளர் மேஜர் நஸ்முத்தீன், தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.எம்.மஷாஹிர் (நளீமி), தென் மாகாண கல்விப் பணிப்பாளர் ஷன்ன உபாலி வீரசேகர, வெலிகம அறபா தேசிய பாடசாலை முன்னாள் அதிபர் அஸ்ஸெய்யித் ஜே.எஸ். வாரிஸ் அலி மௌலானா ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தினர்.

கம்பஹா மாவட்ட

## ஐக்கிய முஸ்லிம் சங்க ஏற்பாட்டில் வாசிப்பு மாத நிகழ்வுகள்

**கொழும்பு தினகரன் நிருபர்**

கம்பஹா மாவட்ட ஐக்கிய முஸ்லிம் சங்கம் ஏற்பாடு செய்துள்ள வாசிப்பு மாத நிகழ்வுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 09 ஆம் திகதி சனிக்கிழமை காலை வத்தளை நகர சபை கேட்போர் கூடத்தில் சங்கத்தின் தலைவர் ஏ.ஆர். மொஹிதீன் தலைமையில் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவின் உறுப்பினர் முஸம்மில் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வுக்கு சமூக சேவையாளரும் ஜே.ஜே. நிறுவனத்தின் உரிமையாளருமான டாக்டர் ஹனீப் பிரதம அதிதியாகவும் தொழிலதிபர் ஸீனத் டிரேடிங் கம்பெனி உரிமையாளர் ஏ.எச்.எம். மாஹிர் கௌரவ அதிதியாக கலந்து கொள்ளவுள்ளனர். கம்பஹா மாவட்ட ஐக்கிய முஸ்லிம் சங்கம் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக பாடசாலை கல்வியறிவு சம்பந்தமாக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. க. பொ. த. சாதாரண தர மாணவர்களுக்கு இலவச வகுப்புகளையும் கருத்தரங்குகளையும் நடத்தி வருவதுடன் வத்தளை களனி மஹர சிங்கள, தமிழ், முஸ்லிம் பாடசாலைகளுக்கிடையில் கட்டுரை, பேச்சுப் போட்டிகளையும் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையில் வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளின் பரிசளிப்பு வைபவங்களும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறுவர்களின் ஆளுமைகளை விருத்தி செய்யும் போட்டி





சிறுவர்களின் ஆளுமைகளை விருத்தி செய்யும் நோக்கில் மாவனல்லை ஐடியல் நிர்வாகத்தினரினால் நடாத்தப்பட்ட சித்திரப் போட்டி நிகழ்ச்சி கனேதன்னை புட்செல் அரங்கில் அதன் பணிப்பாளர் ஆசிரியை சனா ஹனீபா தலைமையில் அண்மையில் நடைப்பெற்றது. இதில் பங்குபற்றிய மாணவர்களுக்கும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பதக்கங்களும் சான்றிதழ்களும் பரிசில்களும் அதிதியாக கலந்து சிறப்பித்த சித்திரக்கலை ஆளுமை ஆசிரியர் என்.ஈ.எம். வாசலஹேவாதிபதி வழங்கி மாணவ, மாணவிகளை மகிழ்வித்தனர்.

# கிழக்கின் குரல்



### அம்பாறையில்

## அனர்த்தங்களை எதிர்கொள்வதற்கான முன்னாயத்த செயற்பாடுகள் ஆரம்பம்

### அரச திணைக்களங்களுக்கு அரச அதிபர் கடிதம்

**(ஒலுவில் விசேட நிருபர்)**



அம்பாறை மாவட்டத்தில் வடகீழ் பருவப்பெயர்ச்சி மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் மழை உள்ளிட்ட அனர்த்தங்களுக்கு முகங்கொடுப்பதற்கான முன்னாயத்தங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அம்மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தெரிவித்தார்.

இது தொடர்பாக அம்பாறை மாவட்டத்தின் உள்ளூராட்சிமன்ற தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.

வடகீழ் பருவப்பெயர்ச்சி மழை அதிகளவாக பெய்யும் பட்சத்தில் அனர்த்தங்களை முகங்கொடுப்பதற்கான மாவட்ட மற்றும் பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவ திட்டம், நிறுவன ரீதியான அனர்த்த அபாய செயற்பாட்டு திட்டம், சமூக மட்ட அனர்த்த அபாய முகாமைத்துவ திட்டங்களை செயற்படுத்த வேண்டும்.

மாவட்ட, பிரதேச, கிராமிய மட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு குழுக்களை வலுப்படுத்தல், மழை வெள்ளத்தால் அதிகம் பாதிக்கக்கூடிய பிரதேசங்களை அடையாளம் காணல், வெள்ளம் ஏற்படுவதற்கான மூல காரணங்களை அடையாளம் கண்டு அதனை நிவர்த்தி செய்தல், அவசர நிலைமையின் போது பாதிக்கப்படும் மக்களுக்கு 6 மணித்தியாலங்களுக்குள் அவசர பதில் நடவடிக்கைகள், அனர்த்த அபாய குறைப்பு தொடர்பான விழிப்புணர்வை கிராமிய மற்றும் பாடசாலை மட்டங்களில் முன்னெடுத்தல், மின்னல் மற்றும் பலத்த காற்றால் ஏற்படக்கூடிய சேதம் தொடர்பாக பொது மக்களுக்கு மத ஸ்தலங்களினூடாக விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண் நிரப்புதலினூடாக வெள்ளம் ஏற்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மாவட்ட பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.றியாஸிடம் 0773957883 அல்லது 0632222218 இலக்கங்களினூடாக அழைப்பை மேற்கொள்ள முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டம்; விழிப்புணர்வூட்டும் நடைபவனி



**தம்பலகாமம் குறூப் நிருபர்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்தின் பிரகாரம் 'சுத்தமான மற்றும் பசுமையான திருகோணமலை' எனும் தொனிப்பொருளின் கீழ் விழிப்புணர்வூட்டும் நடைபவனி நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

திருகோணமலை எகெட் கரித்தாஸின் ஏற்பாட்டில் நடைபவனி முன்னெடுக்கப்பட்டதுடன், சுற்றுச் சூழலை பாதுகாக்கவும் பசுமையான நகரை உருவாக்கவும் வலியுறுத்தப் பட்டது.

திருகோணமலை நகர் பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பமாகிய நடைபவனி திருகோணமலை நகர சபைவரை சென்று, நகரசபைச் செயலாளரிடம் மகஜரும் கையளிக்கப் பட்டது.

சுத்தமான மற்றும் பசுமையான திருகோணமலை, வீதிகள் பொது இடங்களில் குப்பை போடாதீர்கள், மண்ணையும் நீரையும் மாசுபடுத்தும் பிளாஸ்டிக்குகளை ஒழிப்போம், மரங்களைவளர்ப்போம், தூய்மையான காற்றை சுவாசிப்போம் போன்ற பல விழிப்புணர்வு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை இவர்கள் தாங்கியிருந்தனர்.

## சீரற்ற காலநிலையால் டெங்கு பரவும் சாத்தியம்

### பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

**(பாலமுனை விசேட நிருபர்)**

மழையுடன் சீரற்ற காலநிலை நிலவுவதால் டெங்கு நுளம்புகள் பெருகக்கூடிய நிலைமை காணப்படுவதாகவும் ஆகையால் தமது வீடுகள் உள்ளிட்ட சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்துக்கொள்ளுமாறும் பொதுமக்களுக்கு கல்முனை பிராந்திய தொற்று நோய் தடுப்புப்பிரிவுக்கான பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.சீ. எம்.பஸால் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக பெய்யும் கடும் மழையால் கல்முனையின் தாழ்நில பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன. மழையுடனான காலநிலையின் போது டெங்குநோய் தாக்கம் அதிகரிப்பதுடன், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும், அவர் கூறினார்.

வீட்டுச் சூழலில் காணப்படும் பொலித்தீன் உறைகள், சிரட்டைகள், யோக்கட் கப்கள், மட்பாண்டங்கள் போன்ற நீர் தேங்கும் பொருட்களை அகற்றுவதுடன், நீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த காத்தான்குடி சிறுமி ஸீனத்

**(மட்டக்களப்பு குறூப் நிருபர்)**



காத்தான்குடியில் வசித்து வரும் 9 வயதுச் சிறுமியான ஸீனத் சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார்.

சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முன்னிலையில் இச்சிறுமி 3 நிமிடங்கள் 18 நொடிகளில் 140 பெருக்கல் கணக்குகளுக்கு அபாகஸ் முறை மூலம் தீர்வெழுதி உலக சாதனை படைத்துள்ளார்.

சோழன் உலக சாதனை புத்தக நிறுவனம் மற்றும் பீபல்ஸ் ஹெல்பிங் பீபில்ஸ் பவுண்டேஷன் நிறுவனம் இணைந்து நடத்திய இந்நிகழ்வு, மட்டக்களப்பு, காத்தான்குடியிலுள்ள மீரா பாலிகா தேசிய பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வை சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கதிரவன் த.இன்பராசா தலைமை ஏற்று நடத்தினார்.

இந்நிலையில் இச்சிறுமி ஸீனத்துக்கு சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், தங்கப்பதக்கம், நினைவுக்கேடயம், அடையாள அட்டை, பைல் போன்றன வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

காத்தான்குடியில் வசிக்கும் முஹமட் பஸ்லி மற்றும் ஸமீலா புதல்வியாவார் இச்சிறுமி ஸீனத்.

சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கதிரவன் த.இன்பராசா, திருகோணமலை மாவட்ட தலைவர் தனராஜ், மட்டக்களப்பு மாவட்ட பொதுச் செயலாளர் சிவ வரதகரன், செயற்குழு உறுப்பினர் பர்சான் ஆகியோர் இவற்றை வழங்கி கௌரவித்தனர்.

## எமது மக்கள் சகோதரத்துவத்துடன் வாழவே விரும்புகின்றனர்

### திகாமடுல்ல வேட்பாளர்

**(காரைதீவு குறூப், துறைநீலாவணை நிருபர்கள்)**



"எமது மக்கள் ஏனைய இனங்களுடன் சமமாகவும் சகோதரத்துடனும் வாழவே விரும்புகின்றனர்" என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்புச் சார்பாக சங்கு சின்னத்தில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் சோமசுந்தரம் புஸ்பராசா குறிப்பிட்டார்.

கல்முனையில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். இந்தக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"நாளைய சந்ததியினருக்கு எமது இருப்பை, அடையாளத்தை பாதுகாத்துக் கொடுக்க வேண்டியதும் நம் எல்லோரினதும் கடமையும் பொறுப்புமாகும். இதுவே இன்றைய இளைஞர்களின் அவாவாகவும் உள்ளது. எமது இருப்பை பாதுகாத்து நாளைய தலைவர்களான இளைஞர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அதற்கான இந்த கள முயற்சிக்கு ஒற்றுமையாக அனைவரும் என்னுடன் இணையுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

இருப்பை பாதுகாக்கவும் சமூக கட்டமைப்பை வளப்படுத்தவும் எப்போது தடைகள் வருகின்றனவோ அப்போது அந்த தடைகளை உடைத்தெறியும் சக்தி எம்மிடம் இருக்க வேண்டும்

இளைஞர்களே இந்த சமூகத்தின் வழிகாட்டியாக வேண்டும். அம்பாறை மாவட்ட பிரஜை எனும் ரீதியில் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்" என்றார்.

### சிறுவர் துஷ்பிரயோகம், போதைவஸ்துக்கு எதிராக

## சைக்கிள் பயணத்தை ஆரம்பித்த மாணவி காத்தான்குடி திரும்பினார்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதைவஸ்து பாவனைக்கு எதிராக சைக்கிளில் பயணத்தை ஆரம்பித்த காத்தான்குடி மாணவி பாத்திமா நதா கொழும்பு பயணத்தை நிறைவு செய்துகொண்டு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காத்தான்குடிக்கு திரும்பினார்.

இதன்போது காத்தான்குடி பிரதான வீதி வடக்கு எல்லையிலுள்ள நுழைவாயிலில் இம்மாணவியை சமூக செயற்பாட்டாளர்கள், குடும்ப உறவினர்கள் வரவேற்றனர்.

காத்தான்குடி பத்ரியா வித்தியாலயத்தில் 10ஆம் தரத்தில் கல்வி கற்கும் இம்மாணவி கடந்த திங்கட்கிழமை இப்பயணத்தை காத்தான்குடியிலிருந்து ஆரம்பித்தார். இந்நிலையில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதைவஸ்து பாவனைக்கு எதிரான தனது மகஜரை சைக்கிளிலேயே சென்று பிரதமரை சந்தித்து கையளித்து வைத்தார்.

ஜனாதிபதி செயலகத்துக்கும் கடந்த வெள்ளிக்கிழமை சென்று ஜனாதிபதி செயலக அதிகாரியிடமும் தனது மகஜரை இம்மாணவி கையளித்தார்.

## சிறுவர்கள், சிரேஷ்ட பிரஜைகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு





**(இறக்காமம் தினகரன் நிருபர்)**

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினத்தையொட்டி இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சிறுவர்கள் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இறக்காமம் மூன்றாம் பிரிவிலுள்ள ஐக்கிய மக்கள் அஹதியா முதியோர் சங்கச் செயலாளர் ஏ.எம். ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது 80 சிரேஷ்ட பிரஜைகளும் 15 சிறுவர்களும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், முதியோர் சங்கத் தலைவர் மற்றும் அதன் செயலாளர், இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.ரஸ்ஸான் ஆகியோர் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன்போது சிறுவர்களின் கோலாட்ட நிகழ்வும் நடைபெற்றது.

நிகழ்வில் இறக்காமம் பிரதேச செயலாளர் ரஸ்ஸான் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.ஸீ.அஹ்மத் நஸீல், உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல். ஹம்ஷார், சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.ஏ.சபீர், இறக்காமம் பெரிய ஜும்மா பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் ஏ.கே.ஏ.ரஊப் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## திரியாய், வளத்தாமலையிலுள்ள வயல் காணிகளில் நில அளவை

**திருகோணமலை தினகரன் நிருபர்**



திருகோணமலையில் திரியாய், வளத்தாமலை மற்றும் ஆத்திக்காடு பிரதேசங்களில் பொதுமக்களுக்கும் அரிசிமலை பிச்சமல் விகாரைக்கும் சொந்தமானதெனக் கூறப்படும் 68 ஏக்கர் வயல் காணிகளை நில அளவை செய்யும் பணி நேற்று புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

திரியாய், வளத்தாமலையிலுள்ள வயல் காணிகளை நில அளவை செய்ய வேண்டுமென்றும் விகாரைக்கு உரியதென்று கூறப்படும் 68 ஏக்கருக்கும் மேலதிகமான வயல் காணிகள் அடையாளம் காணப்பட்டு உரிய உறுதி வைத்துள்ளவர்களுக்கு தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடன் அவர்களுக்கு விடுவிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

திரியாய் வளத்தாமலையிலுள்ள வயல் காணிகளை அரிசிமலை விகாரை விகாராதிபதி பானமுரே திலகவன்ஸ நாயக்க தேரரும் பொது மக்களும் தமக்கு உரியதென்று உரிமை கோரும் நிலையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

குச்சவெளி பிரதேச செயலாளர் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அப்பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குச்சவெளி பிரதேச செயலக அதிகாரிகள், வனவள திணைக்கள அதிகாரிகள், தொல்லியல் துறை அதிகாரிகள் முன்னிலையில் நில அளவையாளரின் உதவியுடன் மேற்படி காணிகள் நில அளவை செய்யப்பட வேண்டுமென்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண காணி ஆணையாளர், தொல்லியல்துறை உதவி பணிப்பாளர், வனவள அதிகாரி, மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர், குச்சவெளி பொலிஸ் பிரிவுக்கான உதவி பொலிஸ் அத்தியட்சகர், விவசாய சம்மேளன நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மாமனார் காலமானார்

**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

'தினகரன்' பத்திரிகையின் அக்கரைப்பற்று மத்திய நிருபரான சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எல். சரிப்டீனின் மாமனார் முகம்மது இப்றாஹீம் லாபீர் (சலீம்) (வயது58) (மனைவியின் தந்தை) நேற்று புதன் கிழமை அதிகாலை காலமானார்.

அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் நேற்று அக்கரைப்பற்று, பட்டியடிப்பிட்டி பொது மையவாடியில் நடைபெற்றதுடன், ஜனாஸா நல்லடக்கத்தில் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

இவர் அக்கரைப்பற்று, பட்டியடிப்பிட்டியைச் சேர்ந்தவரான இவர், பட்டியடிப்பிட்டி ஜும்மா பள்ளிவாசலின் முன்னாள் முஅத்தினாவார்.

ஆசியா உம்மாவின் கணவரும் சஸ்னா, சப்றினா, சஹானா ஆகியோரின் தந்தையும் சிரேஷ்ட ஊடகவியலாளர் சரிப்டீன், அஸ்றப், உவைஸ் ஆகியோரின் மாமனாருமாவார்.

## தேர்தல் கண்காணிப்பு செயலமர்வு

**திராய்க்கேணி நிருபர்**



இலங்கையின் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான View அமைப்பின் பிராந்திய கண்காணிப்பு குழுவினர் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான தேர்தல் கண்காணிப்பு தொடர்பான அறிவூட்டும் செயலமர்வு நேற்று புதன்கிழமை அட்டாளைச்சேனை பல்நோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

View அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் சாஹிரா இஸ்மாயில் தலைமையில் செயலமர்வு நடைபெற்றது. 'இதில் உங்களுடைய வாக்கு நாட்டின் எதிர்காலமாகும்' எனும் தொனிப்பொருளின் கீழ் view அமைப்பின் ஆலோசகரும் இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான மஹிந்த தேசப்பிரியவால் விளக்கமளிக்கப்பட்டது.

செயலமர்வில் வொய்ஸ் ஒப் ரைட் (Voice of Right) அமைப்பின் பணிப்பாளர் அருள்நாயகம் தர்ஷிக்காவும் கலந்து கொண்டார்.

### இலஞ்சம் பெற்ற

## கிழக்கு மாகாண இறைவரி திணைக்கள பணியாளர் கைது

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

இரண்டு இலட்சம் ரூபாவை இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டில் கிழக்கு மாகாண இறைவரி திணைக்கள பிரதி ஆணையாளர் ஒருவரை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர். மட்டக்களப்பு, செங்கலடியைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டு, இக்கைது இடம்பெற்றதாக, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

மட்டக்களப்பு, சத்துருக்கொண்டான் பிரதேசத்தில் 65 பேர்ச் காணியை ஒரு கோடி ரூபாவுக்கு கொள்வனவு செய்து, அதற்கு 6 இலட்சம் ரூபா முத்திரைத்தொகை செலுத்திய பின்னர், அக்காணியின் மதிப்பீட்டு பெறுமதி இரண்டு கோடியே 65 இலட்சம் ரூபாவென மாகாண இறைவரி திணைக்களம் மீண்டும் அறிவித்தது.

இதற்கமைய அபராத கட்டணத்துடன் அரசாங்க கட்டணமாக 850,000 ரூபா செலுத்தப்பட வேண்டுமெனவும் இந்த தொகையை இரண்டு இலட்சம் ரூபாவரை குறைப்பதற்கு இரண்டு இலட்சம் ரூபா இலஞ்சம் கோரப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவருகிறது.

இப்பணத்தை மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண இறைவரி திணைக்களத்தில் வைத்து பெற்றுக்கொள்ளும் போதே மேற்படி பிரதி ஆணையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.



அக்கரைப்பற்று தொழில்நுட்ப கல்லூரியின் புதிய அதிபராக இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் முதலாம் தரத்தை சேர்ந்த ஏ.ஜனூர்டீன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் கடமையேற்கும் நிகழ்வு நேற்று அக்கல்லூரியின் பதிவாளர் எம்.ஏ.சி.எம்.றகீப் தலைமையில் நடைபெற்றது.

(படம் : பாலமுனை தினகரன் நிருபர்)




இரத்தினபுரி மாவட்டத்தில்

# 11 பிரதேச செயலக பிரிவுகளில் மண்சரிவு அபாயம்

பலாங்கொடை தினகரன் நிருபர்

இரத்தினபுரி மாவட்டத்தில் 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் மண் சரிவு அபாயம் உள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் வெளி யிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதே சமயம் களுகங்கையின் வெள்ள அபாயம் குறைந்துள்ளதா கவும் இரத்தினபுரி அனர்த்த முகா மைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

எஹலியகொடை, கிரியெல்ல, அயகம, எலபாத, கலவான, இரத் தினபுரி, குருவிட ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் மண்சரிவு அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேசமயம் மண்சரிவு அபாயம் தொடர்வதால் மிக அவதானமாக இருக்குமாறு கஹவத்த,ஓப்பனா யக்க, பெல்மதுளை, நிவித்திகல ஆகிய பிரதேச செயலகப்பிரிவுக ளுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிரதேச செயலக பிரிவுகளில் மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் வாழ்கின்ற பொதுமக்கள் அவதானத் துடன் இருக்குமாறும் இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குண ரத்ன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மண்சரிவு அபாயம் கடந்த 14ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ள அதேசம யத்தில் கடந்த 12ஆம், 13ஆம் திக திகளில் களுகங்கையின் நீர்மட்டம் உயர்வடைந்ததுடன் 14ஆம் திகதி காலையில் இரண்டு மீற்றர் அள விற்கு குறைந்துள்ளதாகவும் அறி விக்கப்பட்டது.

இதன் காரணமாக இரத்தின புரி பிரதேசத்தில் வெள்ள அபாய நிலைமை குறைந்துள்ளதாகவும் சிவ னொளிபாத மலைப்பகுதிக்கு கடும் மழை ஏற்பட்டால் மீண்டும் களு கங்கையின் நீர்மட்டம் உயர்வடைய வாய்ப்பு உள்ளதாகவும் இரத்தினபுரி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது.



மத்திய மாகாண சபை கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் மத்திய மாகாண கைவினைப்பொருட்கள் உற்பத்தி யாளர்களது சில்பாபிமாணி 2024 கண்காட்சி அண்மையில் கண்டியில் நடைபெற்றது. கண்டி கே.சி.சி நிலையத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் மத்திய மாகாண பிரதான செயலாளர் அஜித் பிரேமசிங்க கலந்துகொண்டார். **(படம்: அக்குறணை குறூப் நிருபர்)**

# ஊவா தமிழ் இலக்கியப்பேரவையின் ஏற்பாட்டில் மரபுக் கலைஞர்கள் கௌரவிப்பு

ஊவா சுழற்சி நிருபர்

மரபுக் கலைஞர்களை பாராட்டி கௌரவிக்கும் முகமாகவும் அவர் களின் திறமைகளை மேம்படுத் தும் முகமாகவும் ஊவா தமிழ் இலக்கியப்பேரவை மாபெரும் விழாவொன்றை நடத்தவுள்ளது. இவ்விழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி சனிக்கிழமை பண்டாரவளை இந்து கலாசார மண் டபத்தில் நடைபெறவுள்ளதாக பேர வையின் தலைவர் அருண் தியாகு தெரிவித்தார்.

இவ்விழாவின் போது துறை சார்ந்த பல கலைஞர்கள் கௌரவிக் கப்படவுள்ளனர்.

தகுதியானவர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் A4 தாளில் முறையாக தயா ரித்து பதிவுத்தபாலில் செயலாளர், ஊவா தமிழ் இலக்கியப் பேரவை, இல.282/11A, பதுளை வீதி,பண் டாரவளை அல்லது 0770282224 எனும் வட்ஸ்அப் இலக்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.

கும்மி, கரகம், தாலாட்டு, ஒப்பாரி, கோலாட்டம், காவடி, உருமி, உடுக்கு,தாளம், மயி லாட்டம், ஒயிலாட்டம்,நாடகம், நாட்டியம், தெருக்கூத்து, காமன் கூத்து, அர்ச்சுனன் தபசு, பொன்னர் சங்கர், காத்தவராயன் கூத்து, தப்பு, டோலக், தபேலா, மேளம், நாதஸ் வரம், (மலையக பாரம்பரியத்தை உள்வாங்கிய) பாண்ட் வாத்தியக் கலை, கிராமிய பாடல் (மலையக பாரம்பரியத்தை உள்ளடக்கியது), புல்லாங்குழல், மலையகம் சார்ந்த கதை சொல்லல், கூத்துப்பாடல்கள் போன்ற துறைகளில் துறைசார்ந்த கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள் ளனர்.

விண்ணப்பங்களையும் மேலதிக தகவல்களையும் 0770282224 எனும் இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்வதோடு தங்க ளின் வட்ஸ்அப் இலக்கத்தை கூறி PDFஇலும் பெற்றுக்கொள்ளலாம். நேரடியாகவும் தலைவர் மற்றும் செயலாளருடன் தொடர்பை ஏற்ப டுத்தியும் பெறலாம்.

விழா அமைப்பாளர் பண்டார வளை இராஜ் கிரபிக்ஸ் உரிமையா ளர் வீ.இளையராஜாவிடமும் விண் ணப்பங்களை பெறலாம்.

தமிழ் இலக்கியப்பேரவை(ஊவா) எனும் வாட்ஸ் அப்பிலும் ஊவா தமிழ் இலக்கியப்பேரவை மற்றும் Arun thiyagu எனும் முகநூலிலும் விண்ணப்பப்படிவ மாதிரிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

ஊவாவை நிரந்தர வதிவிடமாக வும் பிறப்பிடமாகவும் கொண்டவர் கள் மாத்திரமே இதில் உள்வாங்கப் படுவர்.

# தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்தார் வடிவேல் சுரேஷ்

ஊவா சுழற்சி நிருபர்

ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் பதுளை மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான வடிவேல் சுரேஷ் தனது தேர்தல் பிரசார நடவடிக்கை களை அண்மையில் ஆரம்பித்தார்.

வேட்பு மனுத்தாக்கல் செய்த பின்னர் பதுளை ரொக்ஹி காளியம்மன் தேவஸ்தானத்தில் பூஜை வழி பாட்டை தொடர்ந்து பதுளை ஜும் ஆ பெரிய பள்ளி வாசல்,வரலாற்று புகழ்மிக்க முதியங்கணை பௌத்த விகாரை, கிறிஸ்தவ தேவாலயம் போன்றவற்றுக்கு தமது வேட்பாளர்களுடன் சென்று ஆசிபெற்ற பின்னர் தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.



# அரசியல்வாதிகளால் பெருந்தோட்ட மக்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருகின்றனர்

## சட்டத்தரணி எஸ். விஜயகுமார்

அக்குறணை குறூப் நிருபர்

பெருந்தோட்ட மக்கள் அர சியல்வாதிகளால் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருவதாக நுவரெ லியா மாவட்டத்தில் சுயேட்சைக் குழுவில் போட்டியிடும் மலையக ஜனநாயக முன்னணியின் வேட்பா ளர் சட்டத்தரணி எஸ். விஜயகுமார் தெரிவித்தார்.

மலையக ஜனநாயக முன்னணி யின் வேட்பாளர்கள் அறிமுகம்' அண்மையில் நடைபெற்றது. ஹற்றன் 'டைன் அன் ரெஸ்ட்' ஹோட்டலில் நடைபெற்ற அறிமுக விழாவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

மலையகத்தில் நடைபெறும் அத்துமீறல்களுக்கு எதிராக நாம் குரல்கொடுப்போம். மலையகத் தில் குடியிருப்பு பிரச்சினை முக்கி யமானது. இது பற்றி யாரும் கவனத் திற் கொள்வதில்லை. தோட்டத் தொழிலாளர்கள் தமது சொந்த உழைப்பின் மூலம் அமைத்த குடியி ருப்புகளுக்கு தற்போது பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இவை தொடர்பாக எமது பிரதி நிதிகள் பாராளுமன்றத்தில் குரல் கொடுப்பதாக தெரிய வில்லை. நாம் பாராளுமன்றம் செல்லும் போது இது தொடர்பாகவும், காணி உரிமை தொடர்பாகவும் குரல் கொடுப்போம்.

சம்பள அதிகரிப்பு தொடர்பாக போலிப் பிரசாரங்கள் செய்யப்பட் டன. எமது மக்களுக்குத் இது பற்றி தெளிவூட்டுவது எமது நோக்கமா கும்.

மலையகத்தில் அடிக்கடி கட்சி தாவுகின்றவர்கள் வெற்றி பெற முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# கொள்கலன் வண்டி தடம் புரண்டதில் சிலமணிநேரம் போக்குவரத்து தடை

கினிகத்தேனை நிருபர்

சீமெந்து ஏற்றி வந்த கொள் கலன் வண்டியொன்று வீதி யிலிருந்து தடம் புரண்ட மையால் கினிகத்தேனைப் பிரதேசத்தில் சில மணிநே ரம் போக்குவரத்துத் தடைப் பட்டது.

ஹற்றன் பிரதேசத்திற்கு சீமெந்து கொண்டு செல்லப் பட்ட போதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இதுதொடர் பான மேலதிக விசாரணை களை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.



# ஆலய வழிபாட்டுடன் இ.தொ.காவின் பிரசார பணிகள் ஆரம்பம்





ஹற்றன் சுழற்சி நிருபர்

நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தில் போட்டியிடும் இலங்கை தொழிலாளர் காங்கிர ஸின் பிரசாரப்பணிகள் நேற்றையதி னம் ஆலய வழிபாடுகளுடன் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங் கிரஸின் தவிசாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மரு தபாண்டி ராமேஷ்வரனின் தலை மையில் கொட்டகலை ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் பூஜை வழிபா டுகள் நடைபெற்றதை தொடர்ந்து, மக்கள் சந்திப்பு கூட்டமும் நடை பெற்றது.

இதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப் பாளரும் (அரசியல் பிரிவு) கொட்ட கலை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான ராஜமணி பிரசாத், முன்னாள் உப தவிசாளர், உறுப்பி னர்கள், அரசியல் அமைப்பாளர் கள், ஆலய பரிபாலன சபையினர், வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை தொழிலாளர் காங்கி ரஸின் வேட்பாளர்களாக அதன் பொது செயலாளர் ஜீவன் தொண் டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஷ்வரன், தேசிய அமைப்பா ளர் பழனி சக்திவேல் ஆகியோர் நுவ ரெலியா மாவட்டத்தில் இம்முறை யானை சின்னத்தில் களமிறங்கியுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# நாவலப்பிட்டியிலிருந்து நானுஓயா நோக்கி பயணித்த ரயில் தடம்புரள்வு

தலவாக்கலை குறூப் நிருபர்

நாவலப்பிட்டியிலிருந்து நானுஓயா நோக்கி பயணித்த ரயில் தலவாக்கலை மற்றும் வட் டகொட ரயில் நிலையத்திற்கு இடையில் நேற்று முன்தினம் (15) மாலை தடம் புரண்டுள்ளதாக நாவ லப்பிட்டி ரயில் கட்டுப்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

ரயில் இலக்கம் 1159 தடம் புரண் டுள்ளதாகவும், தடம் புரண்ட புகையிரதத்தை சீர் செய்ய நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ரயில்வே கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக நேற்றுமுன் தினம் (15) இரவு பதுளை மற்றும் கொழும்பு கோட்டையிலிருந்து பயணிக்கும் தபால் ரயில்கள் சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் தாம தமாகச் சென்றதாக நாவலப்பிட்டி ரயில் கட்டுப்பாட்டு அறை பேச்சா ளர் தெரிவித்தார்.



# தங்க நகைகளை திருடி விற்பனை செய்தவர் கைது

ஹற்றன் சுழற்சி நிருபர்

ஹற்றன், செனன் தோட்டப்பகு தியில் தங்க நகைகளை திருடி ரூ. 9 இலட்சத்துக்கு விற்பனை செய்த சந்தேகநபரொருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஹற்றன், செனன் தோட்டப் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. சுமார் ஐந்து பவுண் எடை கொண்ட தங்கநகையைக் காணவில்லை எனப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுக்கமைய இக்கைது இடம்பெற்றுள்ளது. சந்தேகந பர் ஹற்றன் நகரிலுள்ள தனியார் அடகுக் கடையொன்றில் ஒன்பது இலட்சம் ரூபாவுக்கு அடகு வைத் துள்ளமை தெரியவந்துள்ளது. அதன்படி சந்தேகநபரைக் கைது செய்தனர். இதன்போதே சந்தேக நபர் முறைப்பாட்டாளரின் மகன் எனவும் போதைக்கு அடிமையான வர் எனவும் தெரியவந்துள்ளது.

ஹற்றன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள் ளனர்.

# மாணவர்களுக்கு கழிவு முகாமைத்துவ விழிப்புணர்வு

தலவாக்கலை குறூப் நிருபர்

தலவாக்கலை அக்கரபத்தனை, கிளாஸ்கோ பாடசாலையில் கழிவு முகா மைத்துவம் தொடர்பில் பாடசாலை மாணவர்களை தெளிவுபடுத்தும் நிகழ்ச்சி யொன்று அண்மையில் நடைபெற்றது.

இதன்போது கழிவு மீள்சுழற்சி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்பு ணர்வு வழங்கப்பட்டது. தலவாக்கலை லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி, நுவ ரெலியா மற்றும் அக்கரப்பத்தனை உள்ளூ ராட்சி சபைகள் இணைந்து இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.



# உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு கண்காட்சி

ஹட்டன் விசேட நிருபர்





சர்வதேச உணவுத் தினத்தை முன்னிட்டு பெருந்தோட்ட மக்க ளின் உணவு பாதுகாப்பு மற்று போசனை உணவு தொடர்பான விழிப்பு ணர்வு கண்காட்சி நேற்று ஹற்றனில் நடைபெற் றது. பெருந்தோட்ட பகுதியில் வாழும் மக்கள் பொருளாதார நெருக்கடி காரணமாக போசனை குறைந்த உணவு வகைகளையே உண்டு வருகின்றனர். இதனால் பிள்ளைகள் உடல் ஆரோக்கி யம் குறைந்து பல்வேறு சுகாதார ரீதியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அதுமட் டுமின்றி வர்த்தக நிலையங்களில் காணப்படும் இரசாயன பொருட் கள் கலந்த உணவு காரணமாக பலர் அடிக்கடி நோய்வாய்ப்பட்டு வருவ தாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக் கின்றனர்.

## சிறு விளம்பரம்

### வேலைவாய்ப்பு



323

**வெற்றிடங்கள்**
**தொழிலாளர்கள்**

கொழும்பு முன்னணி சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு சுத்திகரிப்புச் சேவையாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். கவர்ச்சியான சம்பளம், சீருடை, ஊழியர் சேமலாப கொடுப்பனவு (கொழும்புக்கு அருகில் இருப்போர் விரும்பத்தக்கது.) அழையுங்கள் - 0766009055. 070657



325

**தொழில்துறை**
**பொது**

வெல்டர்கள் அனுபவமுள்ள வெல்டர்கள் கொழும்பு -12 ஆமர் வீதியில் அமைந்துள்ளபைப் துணைப்பாகங்கள் நிறுவனத்திற்கு தேவை. வயது 25 முதல் அதற்கு மேல் நாளாந்த சம்பளம் ரூ. 3000/- முதல் அதற்கு மேல் காலை 9 முதல் மாலை 5.30 வரை. 011 739 7077, 011 233 1670, 076 9973978. 068935


# பலாங்கொடை பிரதேச சபை

## 2025 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கான அறிவித்தல்

2025 ஆம் ஆண்டிற்கான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்ய 2024.12.31 ஆம் திகதி வரை பலாங்கொடை பிரதேச சபையின் செயலாளராகிய என்னால் அழைக்கப்படுகிறது. சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்து கொள்வதற்கு பின்வரும் கட்டணங்கள் வசூலிக்கப்படும், தொடர்புடைய கட்டணத்தை செலுத்தி ஒருவருக்கு பொருட்கள் சிலவற்றின் கீழ் பதிவு செய்து கொள்ளலாம்.

| இல | வகை | பதிவு கட்டணம் |
|---|---|---|
| 01 | அலுவலக கோப்புகள், நுகர்வோர் பொருட்கள் சுகாதார பொருட்கள் | 2250.00 |
| 02 | அலுவலக இயந்திரங்கள், பிரதியிடும் இயந்திரம், நேரபதிவு இயந்திரம், அச்சிடும் இயந்திரங்கள் | 1500.00 |
| 03 | அலுவலக தளபாடங்கள் மற்றும் உலோக பொருட்கள் | 2250.00 |
| 04 | கணினி இயந்திரம், கணினி மென் பொருள் மற்றும் அச்சிடும் மை, டோனர், கார்ட்ரிட்ஜ், ரிப்பன். | 2250.00 |
| 05 | தொழில்துறை பொருட்கள் (சீமெந்து, இரும்பு, பெயிண்ட், ஓடுகள், போன்றவை.) | 2250.00 |
| 06 | கட்டுமான பொருட்கள் (கல், கருங்கல், மணல், செடலின் போன்றவை.) | 2250.00 |
| 07 | இறப்பர் சீல், திகதி சீல், கோப்பை, பிளாஸ்டிக் /கண்ணாடி பெயர்ப் பலகைகள் | 1125.00 |
| 08. | ஆவணங்கள் மற்றும் பில்கள், அச்சிடும் பொருள் பெற்று கொள்ளல் மற்றும் அச்சிடுதல் | 2250.00 |
| 09. | டிஜிட்டல் பெனர், அச்சிடுதல் மற்றும் ஸ்டிக்கர் அச்சிடுதல் | 2250.00 |
| 10. | துணி அல்லது தட்டுகளில் எழுத்துக்கள் அல்லது ஓவியங்களை உருவாக்குதல் (மின் சாதனங்களும்) | 1125.00 |
| 11. | மின் மற்றும் மின் உபகரணங்கள் மின்குமிழ்கள் உட்பட அனைத்து (மின் சாதனங்களும்) | 2250.00 |
| 12. | நூலகப் புத்தகங்கள் | 1125.00 |
| 13. | தகன நிலையத்தை பழுதுபார்த்தல் மற்றும் சேவை செய்தல் | 1125.00 |
| 14. | டயர், டியுப், பெட்டரி தொடர்புடைய சேவைகள் | 2250.00 |
| 15. | மொழிபெயர்ப்புச் சேவைகள் | 1125.00 |
| 16. | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் (டிராக்டர், ஜே.சி.பி., கெப், பவுசர்) | 2250.00 |
| 17. | மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல் மற்றும் நிறப் பூச்சு | 1125.00 |
| 18. | வாகன சேவைகள் | 1125.00 |
| 19. | அலுவலக இயந்திரங்கள் பழுதுபார்த்தல் மற்றும் சேவைகள் (தொலைநகல், கணினிகள், பிரதியிடும் இயந்திரம்) | 2250.00 |
| 20. | ஆபத்தான மரங்கள் அலுவலக நோக்கங்களுக்காக வெட்டுதல், துண்டாக்குதல் | 1125.00 |
| 21. | மேலே குறிப்பிடப்படாத பிறபொருட்களைக் குறிப்பிடுங்கள் | 1500.00 |
| | கட்டுமான ஒப்பந்தங்கள் | |
| 22. | ரூபா 500,000.00 க்கு குறைவான ஒப்பந்தங்கள் | 1500.00 |
| 23. | ரூபா 500,001.00 இருந்து ரூபா 1,000,000.00 வரையான ஒப்பந்தங்கள் | 2250.00 |
| 24. | ரூபா 1,000,001.00 இருந்து ரூபா 2,000,000.00 வரையான ஒப்பந்தங்கள் | 3000.00 |
| 25. | ரூபா 2,000,001.00 க்கு மேலான ஒப்பந்தங்கள் | 3750.00 |
| 26. | அதிகாரத்திற்குட்பட்ட சங்கங்கள் மாத்திரம் பதிவுக்கு | 1500.00 |

**நிபந்தனைகள்**

1. சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாக பதிவுசெய்ய விரும்பும் விண்ணப்பதாரர்கள் அலுவலகத்தின் வலைத்தளத்தில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவம் அல்லது இதேபோல் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2024.12.31 அதற்கு முன் செயலாளர் பலாங்கொடை பிரதேச சபை எனும் விலாசத்திற்கு பதிவு அஞ்சல் /அஞ்சல் மூலமாகவோ அல்லது கையிலோ சமர்ப்பிக்க வேண்டும்.
2. பதிவுக் கட்டணமாக ஒவ்வொரு பொருளுக்கும் குறிப்பிட்டுள்ள தொகை செலுத்தப்பட வேண்டும்.
3. இந்த கொடுப்பனவுகளை “தலைவர் பலாங்கொடை பிரதேச சபை” பெயரில் காசோலை அல்லது பண ஆணை மூலம் 2024.12.31ம் திகதிக்கு முன் பலாங்கொடை பிரதேச சபையின் காசுக் கருமபீடத்திற்கு செலுத்த வேண்டும்.
4. விண்ணப்பப் படிவத்தின் உறையில் வலது பக்கத்தில் மேலே 2025 ஆம் ஆண்டிற்கான சேவை வழங்குநர் மற்றும் ஒப்பந்தக்காரர் பதிவு செய்தல் என குறிப்பிடப்பட வேண்டும்.
5. ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் கட்டிட பயிற்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தில் ICTAD பதிவு செய்த சான்றிதழ் அல்லது அரசாங்க சட்டரீதியான வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட வெற்றிகரமான ஒப்பந்தக்காரர்கள் மாத்திரம். பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வெளிப்புற வேலைகளுக்கு டெண்டர்களை அழைக்கும் உரிமை சபைக்கு உண்டு.
6. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் சபையின் தேவைக்கேற்ப விலைப்பட்டியல் அழைக்கப்படும் மற்றும் தேவைக்கேற்ப, பொருட்கள் மற்றும் சேவைகள் வெளிப்புறமாக பெற்றுக்கொள்ளும் உரிமை சபைக்கு உண்டு.
7. மேலதிக விபரங்கள் அலுவலக நேரங்களில் 045 2287276 ஐ அழைப்பதன் மூலமும் விண்ணப்பப்படிவத்தை www.balangoda.ps.gov.lk அலுவலகத்தின் வலைத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலமும் அல்லது அலுவலகத்திற்கு வந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

**2024.10.18ஆம் திகதி**
**பலாங்கொடை பிரதேச சபையில்**
**ஜீ.கே.ஆர்.என்.பிரேமரத்ன,**
**செயலாளரும் அதிகாரங்களை செயற்படுத்தும் அதிகாரியும்**
**பலாங்கொடை பிரதேச சபை**

# எம்.எம். றாஸிகின் கல்விப் பணியும் இலக்கியப் பணியும் – ஓர் நோக்கு

பாராளுமன்ற உரை பெயர்ப்பாளராக, ஆசிரிய ஆலோசகராக, நூலாசிரியராக, சமூக சிந்தனையாளராகப் பணிபுரிந்த மர்ஹூம் எம்.எம். றாசிக், கடந்த ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி தெஹிவளையில் தனது 83 ஆவது வயதில் காலமானார்.

ஏழு முஸ்லிம் கிராமங்களைக் கொண்ட ஹெம்மாதகமையின் ஹிஜ்ராகமையைச் சேர்ந்த சப்ரகமுவ மாகாணத்தின் முதலாவது முஸ்லிம் ஆசிரியரான மர்ஹூம் எம். எம். முஹம்மத் முபாரக், தல்கஸ்பிட்டியைச் சேர்ந்த ஹாஜியானி பாத்திமா உம்மா தம்பதிகளின் இரண்டாவது புத்திரரான இவர், 1941 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் திகதி ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தன்று பிறந்தார். இதனால் இவர் ஹஜ்ஜு லெப்பை என்ற பெயரிலும் அழைக்கப்பட்டார்.

ஹெம்மாதகமை அல்அஸ்ஹர் மகா வித்தியாலயம் மற்றும் மடுல்போவை முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வியைப் பெற்ற இவர், 1978 ஆம் ஆண்டு அரசாங்கம் முதல் முறையாக நடாத்திய எட்டாம் வகுப்பு விஞ்ஞான கல்வி புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தர்கா நகர் அல்ஹம்ரா கல்லூரியில் இணைந்தார்.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்ற இவர், உதவி ஆசிரியராகவும் 1963 இல் பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் அல்அஸ்ஹர் கல்லூரியில் பணிபுரிந்தார்.

1965 ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியாக வெளியேறினார்.

1975 ஆம் ஆண்டு சேவைக்கால ஆசிரியராக நியனம் பெற்ற இவர், கேகாலை, கண்டி, மாத்தளை மாவட்டங்களை உள்ளடக்கிய கண்டி கல்வி வலயத்தில் சமூகக் கல்விப் பாட ஆசிரியராகவும் பின் க.பொ.த. உயர்தரம் புவியியல் பாட ஆலோசகராகவும் பணி புரியும் போது, மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தின் செயற்றிட்ட அதிகாரியாக நியமனம் பெற்றார்.




1990 ஆம் ஆண்டு இலங்கை பாராளுமன்றத்தில் சமகால உரைபெயர்ப்பாளராக நியமனம் பெற்றார். பாராளுமன்றத்தின் மூத்த உரை பெயர்ப்பாளர் பதவியில் இருந்து இவர் ஓய்வு பெற்றார். பின் ஜனாதிபதி செயலகத்திலும் மேல் மாகாண சபையிலும் வருகைதரு உரை பெயர்ப்பாளராகப் பணி புரிந்தார்.

இவர் 1997 ஆம் ஆண்டு புதுடில்லியில் பட்டேல்பாய் நிறுவனங்களில் பாராளுமன்ற நிறுவனங்களின் நடைமுறை பற்றிய பட்டப்பின்படிப்பினை பெற்றுள்ளார்.

பின் இந்தியப் பாராளுமன்றத்தில் லோக்சபாவில் ஆறு மாத நடைமுறைப் பயிற்சியையும் பெற்றுள்ளார்.

தமிழ் மொழி, இலக்கியம், இஸ்லாம் ஆகிய துறைகளிலும் சிறுவயது முதல் ஈடுபாடு காட்டிய இவர், பாடசாலைகள் பலவற்றிலும் மாணவர் மன்றங்களில் செயலாளராகப் பணி புரிந்தார்.

இவர், ஹெம்மாதகம அல் அஸ்ஹர் மகா வித்தியாலயத்தில் பணி புரியும் போது மாணவர்களை புறச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதில் அக்கறையோடு வழிகாட்டினார். நான் படித்த அல் அஸ்ஹர் மகா வித்தியாலயத்தில் சாரணப்படையை அறிமுகப்படுத்தினார்.

இவரது வழிகாட்டலில் தான் அகில இலங்கை பேச்சுப் போட்டி, கேகாலை மாவட்ட



பேச்சு போட்டிகளில் பங்கு பற்றி, பேச்சுகளை எழுதி, போட்டிகளுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று மாணவர்களின் பேச்சாற்றலை வளர்த்தார்.

1960 காலத்தில் அல் அஸ்ஹர் மகா வித்தியாலயத்தில் பிரதான கல்லூரிகளில் இருப்பது போன்று பல வெளிவாரி செயற்பாடுகளை இவர் அறிமுகப்படுத்தினார். பெரிய பாடசாலைகளில் இருப்பது போன்று, ஹெம்மாதகம பிரதேசத்தில் அறிமுகப்படுத்தினார்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நன்கு புலமை பெற்றிருந்த மர்ஹூம் றாசிக், ஹெம்மாதக வாலிபர் மன்றம் ஒன்றை உருவாக்கி எழுத்துப் பணி செய்தார். இவர் திஹாரியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் அல்ஹாஜ் மர்ஹூம் யூசுபின் மகளான, முஸ்லிம் மகளிர் கல்லூரியில் ஆங்கில ஆசிரியையாகப் பணியாற்றிய இஸ்ஸத்துன் நிஷா யூசுப் என்பவரைத் திருமணம் செய்தார். இவருக்கு மூன்று பிள்ளைகள்.

2019 ஆம் ஆண்டு கலாசார அமைச்சினால் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். சிறந்த பேச்சாளரும் எழுத்தாளருமான இவர், தீவிர சமயப்பற்றுமிக்கவருமாவார்.

இளைய தலைமுறையினருக்கு பல முன்மாதிரிகளை இவரது வாழ்விலிருந்து பின்பற்ற முடியும்.

**என்.எம்.அமீன்...**


# விலைமனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனுக்கோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| | | | பொருட்கள் | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM [E]/QPPC/24/150<br>கிழக்கு மாகாணத்தின் பயன்பாட்டிற்காக தொலைநகல் இயந்திரங்களின் வழங்கல் மற்றும் விநியோகம் - 3 எண்கள் | 06-11-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM [E]/QPPC/24/151<br>கிழக்கு மாகாணத்தின் பயன்பாட்டிற்காக அச்சிடும் வசதியுடன் கூடிய நகல் இயந்திரங்களின் (Heavy Duty Monograme photocopy machine) வழங்கல், விநியோகம் மற்றும் நிறுவுதல் - 6 எண்கள் | 06-11-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666/026-2221030 | 1,500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM [E]/QPPC/24/152<br>கிழக்கு மாகாணத்தின் பயன்பாட்டிற்காக டப்களின் (Android TAB) வழங்கல் மற்றும் விநியோகம் - 4 எண்கள் | 06-11-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM [E]/QPPC/24/157<br>கிழக்கு மாகாணத்தின் பயன்பாட்டிற்காக அச்சுப்பொறிகளின் A3 (Monograme Printer) வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் பரீட்சித்தல் - 3 எண்கள் | 06-11-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM [E]/QPPC/24/158<br>கிழக்கு மாகாணத்தின் பயன்பாட்டிற்காக மைதொட்டி அச்சுப் பொறகளின் (A4 Monograme Intank printer) வழங்கல், விநியோகம், நிறுவுதல் மற்றும் பரீட்சித்தல் - 6 எண்கள் | 06-11-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/185<br>வாடகைக்கு கட்டிடம் (பொத்துவில் மின் பாவனையாளர் சேவை நிலையம்) - அம்பாறை (இரண்டு வருடகாலம்) | 06-11-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை 063-2222387, 063-2222078 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 , 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/24/186<br>வாடகைக்கு மோட்டார் கார் பிரதமமின் பொறியியலாளர் (வர்த்தகம்) - கிழக்கு திருகோணமலை (இரண்டு வருடகாலம்) | 30-10-2024ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666/026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும்வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

# பூர்வீக காணியை விடுவிக்குமாறு வலியுறுத்தி மடு பிரதேச செயலகம் முன்பாக போராட்டம்

(மன்னார் குறூப் நிருபர்)





மழுவராயன் கட்டையடம்பன் பகுதியிலுள்ள தமது பூர்வீக காணியை வனவள திணைக்களம் கையகப்படுத்தி வைத்திருப்பதாக குற்றஞ்சாட்டி, அப்பிரதேச மக்களால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டம், மடு பிரதேச செயலகத்துக்கு முன்பாக கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த பகுதியில், கச்சான், பயறு போன்ற சிறுதானிய பயிர் செய்கையில் ஈடுபட்டு வந்த நிலையில், கடந்த 2015 ஆம் ஆண்டு வனவள திணைக்களம், இது தமக்கான இடம் எனக்கூறி அங்கு பயிர் செய்கையில் ஈடுபட்ட இருவரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். இதனையடுத்து, அப்பகுதியை வன வள திணைக்களத்தினர் கற்களை போட்டு அவர்களின் பிரதேசமாக மாற்றிக்கொண்டதாகவும், இதன்போது, எமது பூர்விக காணிகளை நீங்கள் எவ்வாறு கையகப்படுத்துவீர்கள் என கேள்வியெழுப்பியபோது, நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் விடுவிப்பதாக திணைக்களத்தினர் தெரிவித்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

தொடர்ந்து, இப் பகுதி மக்களுக்குரியது எனவும் வன வள திணைக்களத்தினர் இதனை விடுவிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்ததன் பின்னரும், வனவள திணைக்களத்தினர் தமது காணியை விடுவிக்கவில்லையென குற்றஞ்சாட்டியுள்ள அப்பகுதி மக்கள், இதனால் தமது வாழ்வாதாரம் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தநிலையிலேயே பாதிக்கப்பட்ட அக் கிராம மக்கள், மடு பிரதேச செயலகத்துக்கு முன்பாக ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

## சுயநலத்துக்காக தமிழ் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர் - டக்ளஸ்

ஈ.பி.டி.பி. தவிர்ந்த ஏனைய தமிழ்த் தரப்புக்கள், தமிழ் மக்களின் அபிலாசைகளையும் பிரச்சினைகளையும் தமது சுயநலன்களுக்காக கையாள்வதாகவும் இதனால் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுவதாகவும் அக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா குற்றஞ்சாட்டினார்.

முல்லைத்தீவு மாவட்ட வட்டார உறுப்பினர்கள் மற்றும் அமைப்பாளர்களுடன் முல்லைத்தீவு கட்சி அலுலவகத்தில் நேற்று முன்தினம் (14) இடம்பெற்ற சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது இதனை தெரிவித்த அவர், நடைமுறைக்குச் சாத்தியமான அரசியலை ஈ.பி.டி.பி. கட்சி மாத்திரமே இணக்க அரசியல் ஊடாக முன்னடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தேர்தல் வெற்றிகளுக்காக கூட்டுச்சேருகின்ற கட்சிகள், தமிழ் மக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தி கூட்டணிகளை அமைப்பதாக தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், கொலை, கொள்ளை, கடத்தல் போன்றவற்றில் ஈடுபட்ட கட்சிகள் தம்முடன் இணைந்திருந்ததாகவும் தற்போது அவர்களை வெளியேற்றி விட்டதாகவும் அண்மையில் ஒரு கட்சி கூறுகின்றது.

மற்றொரு தரப்பு, ஒற்றையாட்சியை ஏற்கமாட்டார்களாம், மாகாணசபையை ஏற்கமாட்டார்களாம். ஆனால், மாகாணசபை தேர்தல் நடைபெற்றால் போட்டியிடுவார்களாம். இவ்வாறானவர்களிடம் உண்மை இல்லை. மக்களை ஏமாற்றுகின்றார்கள்.

எனவே, எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலிலும் மக்கள் கணிசமான வாக்குகளை வழங்கி 4 அல்லது 5 ஆசனங்களை தரும்பட்சத்தில், குறித்த மக்கள் ஆணையை பயன்படுத்தி மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவோம் என அவர் தெரிவித்தார்.

## பெற்றோல் குண்டுத் தாக்குதல்; மோட்டார் சைக்கிள் தீக்கிரை

கரவெட்டி தினகரன் நிருபர்



யாழ்ப்பாணத்தில் நள்ளிரவு வேளை வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்றும் தீக்கிரையாக்கப்பட்டு, வாகனமொன்றின் கண்ணாடிகளும் அடித்து சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இணுவில் வீதி, மானிப்பாயில் வசிக்கும் சந்திரபாலி அஹெனியா என்பவரது வீட்டின் மீதே கடந்த 14 ஆம் திகதி இரவு 11 மணியளவில் இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இராணுவத்தின் 75 ஆவது ஆண்டு

# குறைந்த வருமானம் பெறும் குடும்பத்துக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு கையளிப்பு



கரவெட்டி தினகரன் நிருபர்

இராணுவத்தின் 75 ஆவது ஆண்டை முன்னிட்டு குறைந்த வருமானம் பெறும் குடும்பமொன்றுக்கு இராணுவத்தினரால் புதிதாக நிரந்தர வீடொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பனங்கண்டி பகுதியிலேயே இந்த வீடு வழங்கப்பட்டுள்ளது. யாழ். பாதுகாப்பு கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்கவின் எண்ணக் கருவுக்கமைவாக, 55 ஆவது காலா படை பிரிவின் வழிகாட்டுதலின் கீழ், தேசியப் பாதுகாப்பு படையினரால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இந்த வீடு கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரி விக்கும் லியனகேவினால் நேற்று (16) இந்த வீடு உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சூரியமின்கல யானை வேலி அமைக்கும் வேலைத்திட்டம்



(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தில், காட்டு யானைகளிடமிருந்து விவசாயிகளின் வாழ்வாதார பயிர்களை பாதுகாக்கும் நோக்குடன், சூரியமின்கல யானை வேலி அமைக்கும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் (15) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உலக வங்கியின் நிதியுதவியில் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் கீழ், பூநகரி கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட செம்மன்குன்று பகுதியில் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சூரியமின்கல யானை வேலி அமைக்கும் திட்டமிடமானது, வட மாகாணத்தில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்படுகிறது.

அதன்படி, கிளிநொச்சியில் பூநகரி, அக்கராயன்குளம், முழங்காவில் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நகைகளை திருடிய குற்றச்சாட்டில் இரு பெண்கள் உட்பட ஐவர் கைது

சாவகச்சேரி விசேட நிருபர்



திருடப்பட்ட சுமார் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான 16பவுண் தங்க நகைகளை மீட்ட சாவகச்சேரிப் பொலிஸார் சந்தேகநபர்கள் ஐவரை கைதுசெய்துள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெருடாவில் பகுதியிலுள்ள வீடொன்றில், பகல்வேளையில் நுழைந்த கொள்ளையர்கள், வீட்டிலிருந்த 16பவுண் நகைகள் மற்றும் தொலைபேசி ஆகியவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். கணவன் மனைவி இருவரும் பணிக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பியபோது, தமது வீட்டில் வீட்டில் திருட்டு இடம்பெற்றிருப்பதை அவதானித்து, பாதுகாப்புக் கமராவின் ஆதாரத்துடன் சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடொன்றை பதிவுசெய்துள்ளனர். இதனையடுத்து, விரைந்து செயற்பட்ட பொலிஸார், நகைகளை திருடிச் சென்ற பெண்கள் இருவருடன் அவர்களிடமிருந்து நகைகளைப் பெற்றுக்கொண்ட வர்த்தகர்கள் இருவர் உட்பட ஐவரை நேற்று முன்தினம் (15) கைதுசெய்துள்ளனர்.

அத்துடன், உருக்கப்பட்ட நிலையிலிருந்த நகைகளையும், நகைகளை விற்று பெற்றுக்கொண்ட 7இலட்சம் ரூபாய் பணமும், அப் பணத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆடம்பர மின் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கசிப்பு குகை சுற்றிவளைப்பு



(நாகர்கோவில் விஷேட நிருபர்)

தென்மராட்சியின் எழுதுமட்டுவாள் காட்டுப்பகுதியில் நீண்ட காலமாக இயங்கி வந்த கசிப்பு குகையொன்று நேற்று (16) அதிகாலை சாவகச்சேரி மதுவரி நிலையத்தினரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது, 800 லீற்றர் கோடாவும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக சாவகச்சேரி மதுவரி நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய, மேற்படி பகுதி சுற்றி வளைக்கப்பட்டதுடன், சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## 'தேர்தலை எதிர்கொள்வது எவ்வாறு' - விசேட கலந்துரையாடலுக்கு அழைப்பு

கோப்பாய் குறூப் நிருபர்

"பாராளுமன்றத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றோம்?" என்ற தலைப்பிலான பகிரங்க கலந்துரையாடலொன்று, எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் தொல்புரம் மேற்கு, சுழிபுரம் என்ற முகவரியில் அமைந்துள்ள கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகத்தில் நடை பெறவுள்ளது.

கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இக் கலந்துரையாடல், சபையோரின் கருத்துரைகளுடன் நடைபெறவுள்ளது.

இக் கலந்தரையாடலில், ஆர்வலர்கள் அனைவரையும் பங்கேற்குமாறு சத்தியமனை நூலகத்தினர் அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழரசுக் கட்சிக்கு எதிராக யாழில் வழக்குத் தாக்கல்

யாழ் விசேட நிருபர்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர், பதில் பொதுச்செயலாளர், நிர்வாகச் செயலாளர் ஆகியோர் அப்பதவியை வகிக்க இடைக்காலத் தடை உத்தரவை விதிக்க வேண்டும் என வலியுறுத்தி, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2024 ஜனவரி மாதத்துக்கு பின்னர் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானங்களை சட்டவலுவற்றதாக்க வேண்டும் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்தே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மட்டக்களப்பு கோட்டைக் கல்லாறைச் சேர்ந்த, தமிழரசுக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் மார்க்கண்டு நடராசாவால் கடந்த 10 ஆம் திகதி இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அதில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பதில் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம், நிர்வாகச் செயலாளர் சேவியர் குலநாயகம் ஆகியோர் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதன்போது, வழக்குத் தாக்கல் செய்தவர் முன்வைத்துள்ள கோரிக்கைகளாவன,

1 முதல் 3 வரையான எதிராளிகள் 27.01.2024 இற்குப் பின்னராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவை கூட்டியமையும் அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்புக்கு முரணானவை.

மேலும், 1ஆம் மற்றும் 2ஆம் எதிராளிகள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் என்ற அடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு என்ற பெயரில் எவ்வித கூட்டங்களையும் கூட்டக் கூடாது. அத்துடன், 1ஆம் எதிராளி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற கோதாவில் செயற்படக்கூடாது.

2ஆம் எதிராளி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் என்ற கோதாவில் செயற்படக் கூடாது என்று இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறும் வழக்காளியின் சார்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வழக்காளி சார்பில், சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் தோற்றியிருந்தார். இவ் வழக்கின் அடுத்த தவணை நவம்பர் 18 ஆம் திகதிக்குத் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உலக உளநல நாளை ஒட்டிய சிறப்பு ஒன்று கூடல் நிகழ்வு கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில், நேற்று (16) ஆரம்பக் கல்வி நெறி ஆசிரிய மாணவி ஜெ. சுலோச்சனாதேவி தலைமையில் நடைபெற்றது.

# இளைஞனிடம் ரூ. 80 இலட்சம் மோசடி செய்த நபர் கைது

யாழ். விசேட நிருபர்

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி, 80 இலட்சம் ரூபாவை மோசடி செய்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவரே இவ்வாறு 80 இலட்சம் ரூபாவை இழந்துள்ளார். பாதிக்கப்பட்ட இளைஞன் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், இளைஞனை ஏமாற்றி பணத்தை பெற்றுக்கொண்ட நபரை கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட நபர், விசாரணைகளின் பின்னர், ஊர்காவற்துறை நீதவான் நீதமன்றில் ஆஜர்படுத்திய போது, சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதுக்குடியிருப்பில் டெங்கு ஒழிப்பு; பலருக்கு சிவப்பு எச்சரிக்கை



ஓமந்தை விஷேட நிருபர்

டெங்கு நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில், விழிப்புணர்வு மற்றும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பரிசோதனை நடவடிக்கையும் முன்னெக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார வைத்திய பணிமனையின் ஏற்பாட்டில், சுகாதார வைத்திய அதிகாரி பி.சத்தியரூபன் தலைமையில், இந்த டெங்கு ஒழிப்புக்கான நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன.

இதன்போது, டெங்கு நோய் பரவும் சாத்தியமாக அடையாளம் காணப்பட்ட பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கையும் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், துப்புரவு செய்யப்படாத காணிகள், வெற்றுக் காணிகள், கடைகளின் உரிமையாளர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நடவடிக்கையின்போது, முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய தொற்றுநோய் வைத்திய அதிகாரி வி.விஜிதரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழுள்ள சமுர்த்தி பயனாளர்கள், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், புதுக்குடியிருப்பு பொலிஸார், ஆடைதொழிற்சாலை ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# லங்கா டி10 சுப்பர் லீக்கில் ஷகீப் அல் ஹசன் ஒப்பந்தம்




இந்த ஆண்டு நடைபெறும் லங்கா டி10 சுப்பர் லீக் தொடரில் பங்களாதேஷ் அணியின் அனுபவ வீரர் ஷகீப் அல் ஹசன், கோல் மார்வல்ஸ் அணியில் ஒப்பந்தமாகியுள்ளார்.

லங்கா டி10 தொடரில் விளையாடுவதற்கு வீரர்கள் தங்களுடைய பெயர்களை பதிவுசெய்துகொள்ள முடியும் என்ற அறிவிப்பு வெளியாகியிருந்தது. அதேநேரம் வீரர்கள் தங்களுடைய பெயர்களை பதிவுசெய்துக்கொள்வதுடன், அணிகளும் வரைவுக்கு முன்னதாக வீரர்களை ஒப்பந்தம் செய்ய முடியும்.

அதன் அடிப்படையில் கோல் மார்வல்ஸ் அணி தங்களுடைய பிளாட்டினம் வீரராக சகீப் அல் ஹசனை அணியில் இணைத்துள்ளது.

ஆறு அணிகள் பங்கேற்கும் இந்த தொடரில் 17 வீரர்கள் ஒரு குழாத்தில் இடம்பெற முடியும். இதில் 6 வெளிநாட்டு வீரர்கள் இணைக்கப்பட வேண்டும் என்ற அறிவிப்பு வெளியாகியுள்ளது. லங்கா டி10 தொடரானது எதிர்வரும் டிசம்பர் 12ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் நியூசிலாந்துக்கு தொடர்ந்து மழை இடையூறு



இந்திய மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக ஒரு பந்து கூட வீசப்படாது முடிவுக்கு வந்துள்ளது.

இதன்படி இந்தியாவில் நியூசிலாந்து அணிக்கு தொடர்ச்சியாக 6 ஆவது நாளாகவும் டெஸ்ட் போட்டியில் மழை இடையூறு செய்துள்ளது. முன்னதாக கடந்த செப்டெம்பரில் இந்தியாவில் நடைபெற்ற ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியின் ஐந்து நாட்களும் ஒரு பந்து கூட வீசப்படாது கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பெங்களூரில் நேற்று ஆரம்பமான டெஸ்ட் போட்டியின் நாள் முழுவதும் மழை குறுக்கிட்டது. இதனால் முதல் நாளில் நாணய சுழற்சி கூட போடப்படவில்லை. பெங்களூரில் இந்த வாரம் முழுவதும் மழையுடன் கூடிய காலநிலை நீடிக்கும் என்று முன்னறிவுப்புச் செய்யப்பட்டிருக்கும் நிலையில் இன்று இரண்டாம் நாள் ஆட்டம் நடைபெறும்.

# ஆஷஸ் டெஸ்ட் தொடரின் அட்டவணை வெளியானது



இங்கிலாந்துக்கு எதிரான பாரம்பரிய ஆஷஸ் தொடருக்கான போட்டி அட்டவணையை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த டெஸ்ட் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி பேர்த்தில் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து கப்பா ( டிசம்பர் 4–8), அடிலெயிட் ஓவல் (டிசம்பர் 17–21), எம்.சி.ஜி. (டிசம்பர் 26–30) மற்றும் எஸ்.சி.ஜியில் (ஜனவரி 4–8) எஞ்சிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

இங்கிலாந்து அணி 2010 தொடக்கம் ஆஷஸ் தொடரை வென்றதில்லை என்பதோடு கடந்த ஆண்டு இங்கிலாந்து மண்ணில் நடந்த தொடர் 2–2 என சமநிலை பெற்றது.

2025–27 ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்தில் இந்தத் தொடர் இரு அணிகளுக்கும் முக்கியமானதாக அமையவுள்ளது.

## மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டி20:

# தீர்க்கமான போட்டியை வென்ற இலங்கை தொடர் வெற்றிக்காக இன்று பலப்பரீட்சை




மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியில் 73 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டிய இலங்கை அணி தொடரை 1–1 என சமநிலைக்குக் கொண்டு வந்த நிலையில் தொடர் வெற்றியை எதிர்பார்த்து இன்று (17) மூன்றாவது மற்றும் கடைசி டி20 போட்டியில் களமிறங்கவுள்ளது.

தம்புள்ளையில் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இலங்கை அணி 163 ஓட்ட வெற்றி இலக்கை நிர்ணயித்த நிலையில், சுழற்பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டு மேற்கிந்திய தீவுகளை 16.1 ஓவர்களில் 89 ஓட்டங்களுக்கே சுருட்டியது.

இந்த ஓட்டங்கள் மேற்கிந்திய தீவுகள் அணி இலங்கைக்கு எதிராக டி20 சர்வதேச போட்டியில் பெற்ற மிகக் குறைந்த ஓட்டங்கள் என்பதோடு இது அந்த அணியின் ஆறாவது மிகக் குறைந்த ஓட்டங்களாகும்.

இந்தப் போட்டியில் சுழற்பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தியதோடு மேற்கிந்திய தீவுகளின் ஒன்பது விக்கெட்டுகளை அவர்களால் வீழ்த்த முடிந்த நிலையில் வேகப்பந்து வீச்சாளர்கள் மூன்று ஓவர்களை மாத்திரமே வீசினார்.

இதில் தனது கன்னி டி20 போட்டியில் களமிறங்கிய துனித் வெள்ளாலகே 3 விக்கெட்டுகளை பதம்பார்த்த நிலையில் மஹீஷ் தீக்ஷன, சரித் அசலங்க மற்றும் வனிந்து ஹசரங்க தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

முன்னதாக நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சார்பில் ஆரம்ப வீரர் பத்தும் நிசங்க 49 பந்துகளில் 9 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 54 ஓட்டங்களை விளாசினார். இதன்மூலம் இலங்கை அணி 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில் இன்று நடைபெறும் தொடரை தீர்மானிக்கும் இறுதி டி20 போட்டியும் அதே ரங்கிரி தம்புள்ளை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# சிறந்த பதினொருவர் அணியை பயன்படுத்த ஜயசூரிய முயற்சி



இதன் பின்னர் அனைத்துப் போட்டிகளுக்கும் சிறந்த பதினொருவர் அணியை போட்டியில் பயன்படுத்த திட்டமிட்டிருப்பதாக இலங்கை தலைமைப் பயிற்சியாளர் சனத் ஜனசூரிய குறிப்பிட்டுள்ளார்.

மேற்கித்திய தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றதோடு இந்தப் போட்டியில் சுழற்பந்து சகலதுறை வீரரான துனித் வெள்ளாலகே தனது கன்னிப் போட்டியில் ஆட அழைக்கப்பட்டார். அவர் தனது 4 ஓவர்களுக்கும் 9 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார்.

இந்நிலையில் போட்டிக்குப் பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய சனத் ஜயசூரிய கூறியதாவது,

'டி20 கிரிக்கெட்டில் நாம் இன்றும் சரியான அணி ஒன்றை அமைத்து வருகிறோம். நீண்டகால திட்டமாக நாம் இதனைச் செய்து வருகிறோம். அண்மையில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டி20 இல் ஐந்தாறு விக்கெட்டுகள் விரைவாக விழுந்தன. எனென்றால் 10 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் போட்டியைத் தோற்றோம். குறிப்பாக இப்போது அணியின் மத்திய பின்களத்தின் கடைசி ஓவர்களில் 40க்கு நெருக்கமான ஓட்டங்களை பெறுகிறோம். அது இல்லாததாலேயே இந்தியாவுக்கு எதிரான போட்டியில் 0–3 என தொடரை இழந்தோம்.

பந்துவீச்சாளர்களிடையிலும் நாம் ஒருங்கிணைப்பு ஒன்றை அமைக்க வேண்டியுள்ளது. போட்டிக்குப் போட்டி தம்மை மாற்றிக் கொள்ள வேண்டியது இந்த வீரர்களின் பொறுப்பாகும்.

துனித் வெள்ளாலகே தனக்கு கிடைத்த சவாலை சிறந்த முறையில் கையாண்டார். வீரர் ஒருவரிடம் இருக்க வேண்டிய பண்பாக நான் அதனைப் பார்க்கிறேன்' என்றார்.

அதேபோன்று எப்போதுமே சிறந்த அணியைப் பயன்படுத்தி இலங்கை வெற்றிபெற ஆட வேண்டும் என்பதிலேயே தொடர்ந்து அவதானம் செலுத்தி வருவதாக ஜயசூரிய குறிப்பிட்டார்.

## மகளிர் டி20 உலகக் கிண்ணம்:

# மேற்கிந்திய அணி இங்கிலாந்தை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி



மகளிர் டி20 உலகக் கிண்ணத்தில் இங்கிலாந்துக்கு எதிரான தீர்க்கமான போட்டியில் 6 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணி நியூசிலாந்துக்கு எதிரான அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்று வரும் இந்தத் தொடரின் குழு நிலைப் போட்டிகள் முடிவுற்ற நிலையில் இன்று (17) அரையிறுதிப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன. இதன்படி இன்று டுபாயில் இரவு 7.30 இற்க ஆரம்பமாகும் முதல் அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

தொடர்ந்து ஷார்ஜாவில் நாளை (18) இரவு 7.30 இற்கு ஆரம்பமாகும் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதவுள்ளன.

இந்நிலையில் டுபாயில் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற கடைசி குழு நிலைப் போட்டியில் வலுவான இங்கிலாந்து அணிக்கு அதிர்ச்சி கொடுத்தே மேற்கிந்திய தீவுகள் அரையிறுதிக்கு முன்னேறியது. முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இங்கிலாந்து மகளிர் அணி 20 ஓவர்களுக்கும் 7 விக்கெட்டுகளை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. நட் சிசைவர் பிரன்ட் ஆட்டமிழக்காது 57 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 18 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. ஆரம்ப வீராங்கனைகளான அணித் தலைவி ஹேலி மத்தயூஸ் (50) மற்றும் குவினா ஜோசெப் (52) ஆகியோர் பெற்ற 102 ஓட்ட இணைப்பாட்டமும் அந்த அணியின் வெற்றிக்கு உதவியது.

# செலிங்கோ லைஃப் விளையாட்டு விழாவில் 'AS' குழு சம்பியனானது




இலங்கையின் ஆயுள் காப்புறுதிச் சந்தையில் முன்னணி வகிக்கும் செலிங்கோ லைஃப்பின் வருடாந்த விளையாட்டு விழாவில் 'AS' குழு வெற்றியீட்டியதோடு, 'PK' குழு இரண்டாம் இடத்தை வென்றது.

கொழும்பு சுகததாச மைதானத்தில் அண்மையில் நடந்த இந்தப் போட்டியில் செலிங்கோ லைஃப்பின் 1000க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றனர். 2024 ஆம் ஆண்டுக்கான சிறந்த தடகள வீரராக ஆர் .எம். ஃபர்சாத் தெரிவானதோடு சிறந்த தடகள வீராங்கனையாக ஜி.கே.எஸ். மதுவந்தி தெரிவானார்.

தடகளப் போட்டி நிகழ்வுகளுக்கு முன்னதாக கடந்த ஓகஸ்ட் மாதத்தில் கிரிக்கெட், கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன. ஆண்கள் கிரிக்கெட் போட்டியில் 'AS' குழுவும், பெண்கள் போட்டியில் 'PK' குழுவும் வெற்றி பெற்றன. கரப்பந்தாட்டப் போட்டியில் 'ST' குழுவும், வலைப்பந்தாட்டப் போட்டியில் 'PK' குழுவும் வெற்றி பெற்றன.

செலிங்கோ லைஃப் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி துஷார ரணசிங்க வெற்றி பெற்ற அணிக்கும் தடகளப் போட்டியில் சிறந்து விளங்கிய ஆண் மற்றும் பெண் வெற்றியாளர்களுக்கும் கிண்ணங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

# இங்கிலாந்து அணி 239 ஓட்டங்கள்



பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸை துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து நேற்று (16) இரண்டாவது நாள் ஆட்ட நேர முடிவின்போது 6 விக்கெட் இழப்புக்கு 239 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முல்தானில் நடைபெற்று வரும் இந்த டெஸ்ட் போட்டியில் நேற்று தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த பாகிஸ்தான் அணி 123.3 ஓவர்கள் முடிவில் 366 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. கம்ரான் குலாம் தனது கன்னி டெஸ்டில் சதம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. பந்துவீச்சில் ஜக் லீச் 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணிக்கு ஆரம்ப வீரர் பென் டக்கட் தனது நான்காவது டெஸ்ட் சதத்தைப் பெற்றார். அவர் 129 பந்துகளில் 114 ஓட்டங்களைப் பெற்றார். எனினும் மற்ற வீரர்கள் நின்று பிடித்து ஆடத் தவறினர்.

இதனால் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது இங்கிலாந்து அணி 53 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பாகிஸ்தான் அணி சார்பில் சிறப்பாக பந்து வீசிய சுழற்பந்து வீச்சாளர் சாஜித் கான் 4 விக்கெட்டுகளைப் பதம் பார்த்தார்.

இதன்படி இங்கிலாந்து அணி மேலும் 4 விக்கெட்டுகள் கைவசம் இருக்க 127 ஓட்டங்களால் பின்தங்கியுள்ளது.

# ரொனால்டோ சாதனையை சமன் செய்தார் மெஸ்ஸி



லியோனல் மெஸ்ஸி சர்வதேச போட்டிகளில் 10 ஆவது முறையாகப் பெற்ற ஹட்ரிக் கோல் மூலம் பொலிவியாவுக்கு எதிரான உலகக் கிண்ண தகுதி காண் போட்டியில் ஆர்ஜன்டீன அணி 6–0 என வெற்றியீட்டியது.

அர்ஜன்டீன தலைநகர் பியூனஸ் எயர்சில் நேற்று முன்தினம் நடந்த இந்தப் போட்டியில் காயத்திற்குப் பின்னர் அணிக்குத் திரும்பிய 37 வயதான மெஸ்ஸி, 19, 84 மற்றும் 86 ஆவது நிமிடங்களில் கோல் புகுத்தினார். இதன்மூலம் அவர் சர்வதேச கால்பந்து போட்டியில் அதிக ஹட்ரிக் கோல் பெற்ற போர்த்துக்கல் நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் சாதனையை சமன் செய்தார். உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் ஆர்ஜன்டீனா பெற்ற 7ஆவது வெற்றி இதுவாகும். அந்த அணி 22 புள்ளிகள் பெற்று முதல் இடத்தில் உள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 17ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.